Registered No. M. 329.

Vol. I. March 1903. No. 11.

THE

SUGUNA SUNDARAM.

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி"—குறள்.

CONTENTS.

1. The attack on Theism by Atheists by Ganesa Ariar ... 242
2. The greatness of Paigai Alwar by K. Rungachariar ... 245
3. The examinations instituted by the Tamil Sangam of Madura by K. V. Subramanian ... 248
4. The Ganges and the Kavery ... 251
5. The Government of the Madras Presidency 254
. The injury done by a stepmoth er... 256
7. The important principles of sanitation 258
8. Truth speaking (for youngsters) 259
9. News and Notes 260

அட்டவணை.

1. கா(சா)ர்வாகரின் ஓர் சங்கை. (கணேச ஆரியர்) ...242
2. பொய்கையாழ்வார் வைபவம். (கே. இரங்காசாரியர்) ...245
3. மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்கள் ஏற்படுத்தியிருக்கும் பரீக்ஷைகள் (கா - வே - சுப்ரமணியம்) ...248
4. கங்கையும் காவேரியும். ...251
5. சென்னை இராஜதானி நுரைத்தனம். ...254
6. சாபத்நி மாதாவின் கொடுமை. ...256
7. சுகாதாரத்தைப்பற்றிய விசேஷக் குறிப்புக்கள். ...258
8. உண்மையை மொழிதல் (சிறுவர்கட்கு.) .. 259
9. சமாசாரக் குறிப்புக்கள். 260

Published by
T. S. SUBBARAMA AIYER, *Inamdhar*,
TURAIYUR.

All Rights Reserved.

Printed at the "Minerva" Press, by Thompson & Co., Broadway, Madras

தமிழ் புத்தகங்கள்.

	ரூ.	அ.	ப.
1. ஞானபோதினி (Vol. I, II, III, IV. Each) ...	2	8	0
2. வர்ண வைத்திய சாஸ்திரம் ...	0	8	0
3. மச்சபுராணம் (செய்யுள்) ...	2	8	0
4. திருமுல்லைவாயிற்புராணம் (காலிகோ கட்டடம்) ...	0	10	0
,, (மார்பில் கட்டடம்) ...	0	8	0
5. செய்யுட்கோவை (காலிகோ பவுண்டு) ...	0	13	0
,, (ஸ்டிப் போர்ட்) ...	0	10	0
6. விவேக விளக்கம் ...	0	4	0
7. வாசகத்திரட்டு ...	1	4	0
8. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ...	0	8	0
,, (இரண்டாம்பாகம்) ...	0	8	0
9. மரியாதைராமன் கதை, அப்பாஜி கதை ...	0	1	6
10. இந்தியாவின் எதிர்கால நிலைமை (விவேகானந்த சுவாமிகள் செய்த பிரசங்கம்) ...	0	1	0
11. இந்தியா வாழ்க்கையில் வேதாந்த நிலைமை ...	0	1	6
12. ரூபாவதி புதிய நாடகம் ...	1	0	0
,, (ஸ்டிப்போர்ட்) ...	1	8	0
13 கலாவதி (காலிகோபவுண்டு) ...	1	12	0
14. ஸ்ரீ கிருஷ்ண நாடகாலங்காரம் ...	0	12	0
15. கலிங்கத்துப் பரணி ...	0	8	0
16. நளவெண்பா (மூலம்) ...	0	4	0
17. சரசாங்கி ...	1	0	0
18. பஞ்சதந்திர வசனம் ...	0	4	0
19. ஔவை குறள் மூலம் ...	0	2	0
20. மணியசிவனார் சரித்திரம் ...	0	2	0
21. மறைசையந்தாதி யுரை ...	0	5	0
22. தற்காப்பு நியமம் ...	0	1	0
23. நாடகவியலுரை ...	0	8	0
24. சித்தாந்தப் பிரகாசிகை ...	0	2	0
25. சுகுணசுகேசர் ...	0	12	0
26. லீலாவதி சுலோசனை (Cloth) ...	1	0	0
(Paper) ...	0	12	0
27. சூளாமணி வசனம் ...	0	12	0
28. பட்டணத்தார் பாடல் மூலம் ...	0	4	0
29. பட்டணத்தார் பாடலுரை ...	1	12	0

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

தாம்ஸன் கம்பெனி,
பாபம்ஸ் பிராட்வே, சென்னை.

சுகுண சுந்தரம்

The Editor reserves to himself the right of republishing separately all matrers that appear in the '*Suguna Sundaram.*'

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வால்யம் 1.] 1903௵ மார்ச்சு௴. [நே. 11.

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage Rs.		3	0	0
Half Yearly	,, ,,	1	12	0
Single Copy	,, ,,	0	5	0
Back numbers	,, ,,	0	6	0

Foreign Subscriptions 6 s. Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entitle them to the discount aforesaid.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Donations will be thankfully received.

Missing numbers cannot be replaced without payment if not brought to notice then and there.

Subscribers should not discontinue the journal in the middle of the year. Those that wish to do so, should give us notice of the same in the beginning of the year, *i.e.*, within the end of May; for otherwise one should have to pay for the whole of the urrent volume.

சந்தாவிவரம்.

௵ 1 க்குதபாற்கூலிஉள்படரூ.			3- 0 0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1-12-0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0- 5-0
பழயபிரதி	,,	,,	0- 6-0

இப்பத்திரிகைக்கு மே௴ முதல் சந்தாக் கணக்கு வைக்கப்படும். மே மாதத்துக்குள் சந்தாத் தொகையை முன்பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச் சந்தாவில் அணா 8-ம், ஆறுமாதச் சந்தாவில் அணா 4-ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய்ச் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒருமாதத் தவணையுங் கொடுக்கப்படும்.

இந்தப்பத்திரிகைக்குப் பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்த யோக்யதையுடையவைகளாயிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக் கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந் தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

நன்கொடைகளை வந்தனங்களுடன் பெற்றுக்கொள்ளப்படும்.

தவறிப்போகும் நெம்பர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய நோட்டீசுக்குக் கொண்டுவந்தாலன்றி, பணம் செலுத்தாமல் மறுபடி அனுப்பப்படமாட்டா.

பத்திரிகையை வருஷமத்தியில்நிறுத்தக்கூடாது. நிறுத்த விரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது மேமாதத்திலேயே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படி தெரிவிக்காதவர்கள் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும்.

சா (சா) ர்வாகரின் ஓர் சங்கை.

எம்மதத்திற்கும் மறுப்புண்டா? ஆன்மாவே பிரபஞ்சத்திற்குக் காரணமென்கிறீரே ; இவ்வாதம் ஒவ்வாது. யாம் அநேக குற்றங்களிருப்பது பற்றி அனுமானப் பிரமாணத்தை ஒப்புக்கொண்டோ மில்லை. அறிவு என்று வழங்கும் சைதந்ய சக்தியின் யதார்த்தமான அனுபவத்தையும் பிரமாணமாய் ஒப்புக்கொள்ளவில்லையா ? இச்சைதந்ய சக்தியைத்தவிர ஆன்மாவென் றொருவனிருப்பதாகச் சாதித்தல் முற்றும் தவறான விஷயமேயாம். ஆதலின் சேதன சேதனமான பிரபஞ்சத்திற்கு அசேதனங்களான பிரதிவி, அப்பு, தேயு, வாயுவென்னும் நான்கு பூதங்களே காரணங்கள். சூரிய வெப்பத்தினாலுண்டாகும் வியர்வை அசேதனமாயினும் அதில் நின்றும் பிராணிகள் உண்டாகின்றதெனப் புறமதத்தவர்களுள்ளும் ஒப்புக்கொண்டவர்க ளில்லையா ? கற்பாரைகள் அசேதனங்களாயினும் அவைகளின் மத்தியில் தேரைகள் உண்டாகவில்லையா ? சாண (கோமய)த்தினின்றும் புழுக்களுண்டாகின்றன. ஆதலால் பிரதிவ்யாதிகளான பூதங்கள் அசேதனங்களையும் அவைகளே பரிணாம வசத்தால் சேதனங்களையும் உண்டாக்கக்கூடிய ஸ்வபாவ முடையதாகின்றன வென்பதே முற்றும் பொருந்தும்.

சரீரமாய்ப் பரிணமித்த நான்கு பூதங்களின் ஸாராம்சமே சைதந்ய சக்தியாகிறது. அது உருவமல்லா திருந்தாலும் சரீரத்தின் ஓர் இடமாகிய மூளையென்னும் இடத்திலுண்டாகும் ஓர்வகை பிரகாசமே. அதன் ரூபம் வெளிப்பொருள்களோடு ஸம்மந்த முண்டாகும் சமயத்தில் சரீரத்தின் நாடிகளில் ஓர் வகை அசைவு உண்டாகிறது. அவ்வசைவு மூளைவரையில் சென்று முடிவு பெறுகிறது. அவ்வசைவு மூளையிடம் சென்றவுடன் அங்கு ஓர்வித பிரகாசம் காணப்படுகிறது. உடனே மறுபடியும் அசைவு உண்டாய் அவ்வசைவு முன் உண்டான இடம் வந்து சேருகின்றது. இவ்விதமே புலன்களுக்கும் மூளைக்கும் அசைவு உண்டாய்ப் போக்கு வரவு பற்றியும், உண்டாகும் பிரகாசம் சைதந்ய சக்தியென்று கூறப்படும். இச்சைதந்யத்திற்கென ஆன்மா வென்றொருவனைக் காரணமாய்க் கூறவேண்டுமா ? இச்சைதந்ய சக்தியானது நான்கு பூதங்களான தேகத்தினின்றுண்டாகாவிடில், சரீரத்தின் பலாபலத்தை அனுசரித்து இதற்கும் பலாபலம் நேருமா ? அஃதாவது சரீரத்தின் பலம் குறைந்தால் சைதன்ய சக்தியுங் குன்றி ஒய்வு பெருகுகிறது. சரீரம் ஆரோக்யமாயிருந்தால் இதுவும ஆரோக்யமா யிருக்கிறது. வைத்திய சாஸ்திரங்களில் மிக்க வல்லோர் புத்தி விருத்திக்கென சிற்சில மூலிகைகளையும் காய் கறிகளையும் கூறவில்லையா? அவ்விதமே யுண்டாவதையும் அனுபவித்தோமில்லையா?

கெட்ட நாற்றத்தைப் புலன் அறியச் சைதன்ய சக்திக்கு மாறுபாடுண்டாகவில்லையா? இவ்விதமான அனுபவங்களால் பூதங்களின் கூட்டுறவால் சைதன்ய சக்தி உண்டானதெனக் கூறுதல் குற்றமா? ஆதலால் அசேதனங்களான நிலம் நீர் முதலான பூதங்களே சேதனு சேதனமான பிரபஞ்சத்திற்குக் காரணங்கள். மாம்பழத்தில் வண்டுகளும், அத்திப் பழம் முதலானதுகளில் புழுக்களும் பூச்சிகளும் உண்டாயிருக்கிறதை நாம் பார்க்கவில்லையா? அவ்விதமே பூதங்கள் ஜகத்திற்குக் காரணமாயிருக்கிறதென்று கூறுவது மொவ்வும். காரணத்தின் குணம் காரியத்தில் காணப்பட வேண்டுமென்பது உசிதமல்ல. காரணமான மண்ணின் அமைப்பும் குணமும் காரியமான கடத்தில் காணப்படுகிறதா? நம்மவர் தான் ஆன்மக்குடமென்றும், ஆன்மப்பட மென்றும், ஆன்மக்குட்டிய மென்றும் அனுபவிக்கின்றார்களா? குடத்தைக் குடமென்று அனுபவிக்கின்றாரே யன்றி மற்றதல்ல. குடத்திற்குக் காரணமான குபவனைப்போலுள்ளது பூதங்களின் ஸ்வபாவமே. அச்சுபவாமோ (கிரியைக்கு)த் தொழிற்படுவதாலும், மற்ற இனத்தின் கூட்டுறவாலும் வேற்றுமையையும் அடைகின்றது. அஃதெப்படியெனில், மண்ணின் கண்ணிருக்கும் வளைத்தல் முதலான சுவபாவங்கள் (தொழிற்பட்டு) மண்ணின் காரியமாகியதும் சூரிய கிரணத்தின் சம்பந்தத்தைப் பெற்றதும் பக்குவ மாகாததான கடத்தின் கண்ணிருப்பதில்லை. அக்கடத்தின் சுவபாவமும் பக்குவமான பின்பு இருப்பதில்லை. ஆதலாற் றொழில்படுவதினாலும் உபாதியாலும் கூட்டுறவாலும், பூதங்களின் சுவபாவம் மாறுபாட்டை அடைகிறது. இவ்விதங்களான நான்கு பூதங்களே பிரபஞ்சத்திற்குக் காரணங்கள்.

சுவபாவமும ஓர் காரணம் தான். அஃது இராவிடில் மணலையேன் கடமாய்ச் செய்யக்கூடாது? மண்ணெல்லாம் கடமாகிறதா? பருத்தியெல்லாம் வஸ்திரமாகிறதா? உழமண் கடமாவதைக் கண்டோமில்லை. இலவம் பஞ்சு வஸ்திரமாவதைக் கண்டோமில்லை. ஆதலால் ஒவ்வொரு காரியத்திற்கும் உரிய இயற்கையற்ற வஸ்துக்கள் காரணங்களாகாது. கடமுள்ளது படமுள்ளது என்னுமனுபவத்தால் சத்ரூபனை ஆன்மா என்று ஒருவன் இருக்கிறதாக அறியப்படுகிறது என்று இம்மதத்தின் மறுப்பில் வரைந்த விஷயம் முற்றும் பொருந்தாது. "குட்டிச்சுவற்றிற் றேள்கொட்டிக் கட்டுமுளையில் நெரிகட்டிற்று" என்னும் வசனம்போல் கடமுள்ளதென்னும் அனுபவத்தால் ஆன்மாவென்ற ஒருவனை அறியக்கூடும் என்றவசனமும் பிதற்றலேயாகும். கடம்படம் முதலான எல்லாவஸ்துக்களிலும் (சத்+ஐ) சத்தை என்று ஒன்று இருப்பதை எங்ஙனம் அறிவது? அஃதை ஒப்புக்கொள்ளாவிடில் என்ன குற்றம்? பிரத்தியக்ஷமாயிருக்கும் கடபடமுதலான வஸ்துக்களை

இல்லையென்று சாதிப்பது நகைப்பல்லவோ? சத்தியமாயும், ஒவ்வொரு சுவபாவத்தையும் உடையனவான பூதங்களின் காரியமான இப்பிரபஞ் சத்தை கயிற்றிற் கற்பிதமாய்த்தோன்றும் அரவம்போ லென்கிறார்க ளே! இதை எவ்விதம் ஒப்புவது? கற்பிதமாய்த்தோன்றும் அரவத்தைப் பிச்சையாண்டி எடுத்துக்கொண்டுபோய்ப் பிச்சைவாங்குவதுண்டா? கானல் நீரைக்கொண்டு தாகத்தைத் தீர்த்தவனுண்டா? கயிற்றிற் றோன்றும் அரவம் கடித்திறந்தவனுண்டா? (ஆதலால்) கடபடமுத லானதுகள் நாமரூபங்களாய் மாத்திரமுள்ளவைகள்; உண்மையல்ல என்கிறது யதார்த்தமாகில் கடத்தில் நீர்மொள்ளுவதும் படத்தை அரையில் கட்டுவதும் ஸம்பவிக்காமல் அல்லவோ போகவேண்டும்? அவ்விதம் சம்பவிப்பதைக் கண்டிலேமா? பிரத்தியக்ஷமாயிருக்கும் பிர பஞ்சத்தை ஆரோபிதம் அதாவது பொய்யெனக் கூறும் நம்மவர்கள் தான் அப்பிரத்தியக்ஷமான ஆன்மாவென்று ஒருவனையும் ஒப்புவது எப்படி? சத்தியமாயும் சுவபாவமாயும் இருக்கிற இப்பிரபஞ்சத்தைப் பொய்யென மொழிவதற்கு அறிவுடையவர்களது நாவஞ்சாது. உல கில் வாஸ்தவமா யிருக்கும் வஸ்துக்கள் அல்லவா மற்றோரிடத்தில் கற்பிதங்களாகும், அதாவது மற்றோரிடத்தில் வாஸ்தவமாய் அரவம் இருந்தும் கயிற்றில் ஆரோபிதமாவதுண்டு. கயிற்றில் மலடியின்பிள்ளை முயற்கொம்பு முதலான பொய்ப்பொருள்கள் ஆரோபிதங்களாவதுண் டா? அங்ஙனமாகில் இப்பிரபஞ்சம் எவ்விடத்தில் ஆரோபிதமல்லவென்று நம்மவர்கள் கூறுகின்றார்கள்? ஆதலால் பிரபஞ்சம் ஆரோபிதமென் றும், கடபட முதலானதுகளின் அனுபவ விருத்த வியவகாரத்தால் ஆன்மாவென் றொருவனை யறிகின்றேமென்று கூறுவது மஸங்கதமே யாம்; ஆதலின், பிரபஞ்சத்திற்குப் பூதங்களும் அவைகளின் சுபாவங் களுமே காரணங்கள்.

"अग्निरुष्णो जलं शीतं शीतस्पर्शस्तथानिलः।
केनेदं चित्रितं तस्मात्स्वभावात्तद्व्यवस्थितिः॥"

என்றுகூறும் பிரஹஸ்பதி பகவான் வசனத்திற் கிணங்கியதும் சர்வ ஜனானுபவத்திற்கு மிணங்கியதுமே எம்மதமாம்.

(இன்னும்வரும்.)

கணேச ஆரியர்.

பொய்கையாழ்வார் வைபவம்.

அகில புவனங்கட்கெல்லாம் ஹேதுபூதமாய திரு நாராயணன், றனது கருணாரஸ பூரிதத்தாலுலகை யுய்விப்பான் பேரவாக்கொண்டு தமதைம்படைகளி லொன்றுத் தனித்த பெரும் பெற்றியுற்றுத் துலங்கும் பாஞ்சஜந்யத்தை யிந்நிலவுலகில் ஓராழ்வாராக ஜனிப்பித்தருளினார். அன்ன பெருந்தகையாளர்தாம் * பொய்கையாரென்பார்.

இவ்வாழ்வார்தாம்,—

"மற்றுள்ள வாழ்வார் களுக்குமுன் வந்துதித்து
நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த—பெற்றிமையோ
ரென்று முதலாழ்வார்க ளென்னும்பே ரிவர்க்கு
நின்றதுலகத்தே நிகழ்ந்து,

என்றும் கூறுவபோன்று பன்னிரண்டாழ்வார்களினும் முற்பட்டோராய்,

तुलायांश्रवणेजातं कांच्यांकांचनवारिजात् ।
द्वापरेपांचजन्यांशं सरोयोगिनमाश्रये ॥

என்றறைந்துள்ளவண்ணம் த்வாபரயுகம் 862901-வதானஸித்தார்த்திவருடம் ஐப்பசி மாதம் சுக்கிலபக்ஷத் தட்டமி செவ்வாய்க்கிழமை கூடிய திருவோண நக்ஷத்திரத்தில் பாஞ்சஜனியாம்சங்கொடு அயோநிஜராய் (கமலயோனி யியற்றிய இவுளிமேதத் திடமா யுர்ப்பவித்தருளிய 'உயர்வற உயர்நல'—மருளப் பெற்றபேரருளாளரான எம் பெருமான் நின்றதிருக்கோலங் கொண் டெழுந்தருளியிருக்கும்—"முத்திதரு நகரேழின் முக்கியமாங் கச்சி தன்னில்") திருவெஃகாவிற் 'பொய்கை' யெனும் திருப்பெயர் சூட்டப்பெற்றுப் பாபமனைத்தினையும் போக்க வல்லதாய புட்கரணியின் பொற்கமலத்திடையே யோரிளங் குழவியா யாவிர்ப்பவித்தனர்.

இவ்வாழ்வார் பரம கருணாலயனான ஸ்ரீமந்நாராயணனது அருள் விசேடத்தாலாவிர்ப்பவித்தவரானதால், குழவிப்பருவ மடைந்துள்ள தாம் வேறோராதரவுமின்றி (உற்பவித்த வணம்போல்) வளர்ந்து, இராஜஸ, தாமஸகுணங்களையும், ஷடரிகளையும், தாபத்திரியங்களையும் நீத்து சத்துவகுண மேலீட்டால் பகவத்தாஸ்யத்தையுடையாராய், அதனாலாய ஞாந, பக்தி, வைராக்கியாதிகளை யடைந்து, மானிட வளர்ச்சிக்குரிய யன்ன பானாதிகளை யொழித்து யாவரானும் வியந்துகொண்டாடற்கேற்ப பகவத் குணானுபவங்களிலீடுபட்டு தராகப் பிரமத்தையே தமதுரிமைப் பொருளாக்கொண் டெழுந்தருளியிருந்தனர்.

இங்ஙனமிருந்துழி யிவ்வாழ்வார் பற்றற்றவராகையால் ஒருநாளிருந்த ஊரில் மறுநாளிருந்திலராய் ஊருக்கோரிரவாகச் செல்லா னிருந்துழி, இன்னவரது வைபவாதிக்கத்தை யுலகினர்க்குப் பொருந்தக் காட்டுவிப்பான் றிருவுளமுவந்த கருணைபம் புணரியாய பகவான், பின்வருமாறு இயற்றியருளினர். அஃதெங்ஙனே யென்னில்,

* பொய்கையிலுதித்த காரணத்தா லிவர்க்குப் பொய்கையாரெனத் திருப்பெயராயது.

நங்குரவர்பெருமானு மிவ்வாழ்வாரைப்போன்று இவர்க்குப் பின்னுதித்தவராய பூதத்தார், பேயாழ்வாராகிய இருவரு மொருவரையொருவர் அறியாது திருதருங்கால் ஒருநா ணள்ளிருளில் திருக்கோவிலூரிலோ ரிடைகழியருகே செல்லா நின்றுழி, பெருமாரியோடு சண்டமாருதமும் ஒன்று குழுமித் தமதாற்றலைக்குறைவற நிகழ்த் தாநிற்றலு மவைகளி னதிக்கத்தைக் கண்ணுற்று ஆதியாக வோராழ்வார் முன்னங் கூறிய இடைகழியினுட்புக்குக் கவாடத்தாழிட்டுக் கிடக்கச், சாலவு மோராழ்வார் அவ்வணமே வக்கழியுட்புக விழைந்தடைந்து கவாடத்தைத் தட்டித் தாள்திறக்க வென்னலும், உள்ளுள்ளார் : தாள்திறக்கவென்றவனைக் கூயிஇ, இக்கழி யொருவர் * கிடத்தற்கேற்றதேயல்லாது பிறர் கிடக்கற்குரிய தன்றென்னலும்.

பின்னவர்:—முன்னவனை விளித்து § ஒருவர் கிடத்தற்குப் போதியயிடம் இருவர் ‡ இருக்கற்குறியதாமென,—தமது வாக் விசேடத்தையும், சாதுரியத்தையும், உன்னி வியந்து கேவலரல்லரெனத் தேர்ந்து தாழைத் தள்ளி கவாடபந்தனத்தைப் போக்கித் தம்மை யுட்செலவிடுத்த முன்னவனை யண்மிக் கதவின்ருளிட்டுப் பின்னவரும் சின்னாழிகையளவும் வெருமனே கிடந்தனர்.

இன்னண மிருவராங்கால், ஓர் கடிகைக்குள்ளாக மூன்றுமவராய பொய்கையாருமவணெய்தி யடைப்பின்றுளை நீக்கி யருள்கவென்னலும், உட்புக்குள்ளா ரிருவரில் —

முற்பட்டோர்:—இதேது ? நம்மொருவர் கிடக்கமாத்திரம் போதியதாய இவ் விடைகழியில்மூவர் எங்ஙனமிருத்தற் கிடமாகும் ? என வையுற்றமனங்கொடு வாயிலாவோனை விளித்து ஐயமீர் ! நீவிரீண்டெய்தப்போகா. என்னெனில்:...இருவர் கிடத்தற்கு மாத்திரம் இக்கழி யிடந்தருமே யல்லாது மூவரிருக்க வேலாதென மறுக்கப், பொய்கையாரு மம்மருத்தலுக்கேற்க அன்னவனைக் கூயிஇ இருவரிருக்கற் கேற்றது § மூவர் நிற்க இடம் போதரும்-திறவுமென்றேற்றவணம் கடாவலும்,

முன்னவர்:—தம்மோடுள்ளவரினு மிவ்வாழ்வாரைப் பெரிதும் வியந்துபேசிக் கதவைத்திறந்து உள்ளெழுந்தருளப்பண்ணிக்கொடுபோய், —நீவிரார் ! நீவீரார் ? நீவிரார் ? என வம்மூவரு மொருவரையொருவர் பேரமைதியோடு கேட்டருளலும்,

ஒருவர்:—யான் ஸ்ரீயப்பதியான வாசுதேவனுக்கு சேஷபூதன்.

மற்றவர்:—யான் றண்டுழாயலங்கலானுய ஸ்ரீமன் நாராயணனது தாசபூதன்.

பின்னவர்:—யான் பரமஞானநந்தனுய முளரியாட் கொழுநனுக்குத் தொண்டனுவேன் என ஒவ்வொவரும் தந்தாமுடைய ஸ்வரூப நிர்த்தேசப் பிரசங்கத்தாலே தெரிவித்துக்கொண் டெழுந்தருளி யிருந்தனர்.

இவ்வாறுய வமயத்து முன்னம் மொழிந்துள ஸர்வேச்வரன் (துளவீவனங்களிலும், தாமரைக் காடுகளிலும், ஸ்ரீவைணவர் வதியுமிடங்களினும் தாம் வதிவானுகையாலே) இப்ராம்மண மேதாவியர் மனத்தைச் சோதிப்பான் பிராட்டியொடெழுந்து ——— இம்மூவர் நெருக்குண்டு கிடந்துழலு மமயமோர்ந்து, அன்னவர்

* கிடத்தல்=படுத்தல்.

‡ இருத்தல்=உட்காருதல்.

§இக்குறிப்பிட்ட விடங்களிற் கூறியவைகளையே-ஒருவர் கிடக்கலாம், இருவரிருக்கலாம், மூவர் நிற்கலாம்-என்றவ் வாழ்வாருள் எழுந்த வர்க்கெனதொன்று தொட்டு வழங்கி வராநின்றன.

தோற்றத்துக் கிலக்காகாது கரந்து தேஜோமயமாய் அன்னவரை நெருக்கி நின்றனர். இவ்வணமாகப் பரமபதநாதன் நெருக்குண்டு கிடப்பது தந்தோற்றத்துக் கிலக்காகாமை கண்டு——இஃதேது? நம்மூவரினும் வேறாய ஒருவர் சேர்ந்து நெருக்குகின்றாற்போ லிருக்கின்றது! விளக்கொளிகொண்டு காணவேண்டுமென்ன———, அவ்வமயத்துப் பொய்கையாரும், பூதத்தாரும்—, இன்ன கட்புலனுக்கேற்கா நெருக்கம், அகிலஞானனந்த பரிதனை ஸ்ரீமந் நாராயணனுடையதாகக் கூடுமென்று தமது பரபக்தி ஞானங்களானுணர்ந்து அப்பிரணவப் பொருளைத் தரிசித்துச் சொன்மாலையாகிற திருவிளக் கொளிகொண்டு காட்டப், பேயாழ்வாரும் அவ்விதமே தம்பக்தியாதிக்கத்தால் ஜகந்நாதனது படிகளைக் கண்டு பேரானந்தமுற்று அவனது குணானுபவத்திலேயே திளைத்துக் கிடந்தனர்.

இங்ஙனம் பொன்னாழியும், புரிசங்குமேந்திப் பொன்மேனியோடே திருமகளுடன் நிற்கிற ஸ்ரீ க்ஷீராப்திநாதனது வடிவழகையும், செந்தாமரைக் கண்களையும் நெஞ்சென்னு மகக்கண்கொடு அனுபவித்து அவ்வனுபவாதிக்கத்தாலே பொய்கையார்,———————

வையந்தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று,

இதுபோன்ற வேனைய நூறு பாசுரங்களையும், பூதத்தார்——

அன்பேதகளியா வார்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

என்றிது வாதியாய நூறு பாசுரங்களையும்,—— பேயாழ்வார்,—

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
அருக்க னணிநிறமுங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன் புரிசங்கங் கைகண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று.

என்றின்னவாய நூறு பாசுரங்களையும் பாடி, இப்பாசுரங்களை, இல்லற நடாத்துபவராய சம்சாரிகளும் படனித்து அஜ்ஞானந்தகாரம் நீங்கி யுய்யும் பொருட்டா வருளிச் செய்திந்து ஜகதுபகாரமாய வின்னும் பலபல விபவங்களையும் நிகழ்ப்பித்தெழுந்தருளியிருந்தனர்.

ஆதலா னிவ்வாழ்வாரதருள் வெள்ளமாய பாசுரங்களனைத்தினையுங் கற்றுக் கருணாஸாகரனாய ஸர்வலக்ஷணனது திருநாடுபேற்றைப்பெற்றுய்வோமாக. ததாஸ்து.

கே. இரங்காசாரியர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்கள் ஏற்படுத்தியிருக்கும்

பரீக்ஷைகள்.

ஏ, சுருணசுந்தரம்! மேற்கண்ட சங்கத்தார்கள் தற்காலத்தில் தமிழின் அபிவிருத்தியின்பொருட்டுச் செய்துவரும் முயற்சிகள் உன்னை ஆதரிப்பவர்கட்கும் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். இவ்வித அபிவிர்த்தி செய்வது முக்கியமாய்ச் சிறுவர்களைக் கொண்டே ஆகவேண்டியதென்று அறிந்து அவர்கள் ஆங்கிலேய பள்ளிக்கூடங்களில் மெட்ரிகுலேஷன், எப்-ஏ, பி-ஏ, முதலான வகுப்புகளில் படிக்கும் மாணுக்கர்களுக்குப் பரிக்ஷை ஏற்படுத்தியிருக்கிறூர்கள். இந்த பரிக்ஷைகளால் மாணுக்கர்கள் தென்மொழியில் பயிற்சி அடைகிறூர்கள். சங்கத்தார்களால் இப்படிப் பரிக்ஷைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்று பலர் அறிந்திருந்தாலும், இவைகளைப்பற்றி உன் வாயிலாகவும் சில விஷயங்கள் என் சிற்றறிவிற் கெட்டியமட்டில் வெளியிடத் துணிந்தேன்.

சங்கத்தார்கள் தென்மொழியில் செய்யும் பரிக்ஷைகளினுல் சிறுவர்கள் தமிழ் பாஷையைக் கற்கவும், அது இனி ஓங்கவும் காரணமாகின்றது என்று எல்லாருக்குந் தெரிந்த விஷயந்தான். ஆனுல் இந்தப் பரிக்ஷைகளில் யூனிவர்சிடி பரிக்ஷைகளுக்குள்ள பாடபுஸ்தகங்களிலும் (University Text Books), பொதுவாய் இலக்கணமுதலிய பாடபுஸ்தகங்களிலும், வியாஸம் எழுதுவதிலும் பரிக்ஷைகள் கேழ்க்கிறூர்கள். இலக்கண வாஸனையே அறியாத தற்காலத்திய சிறுவர்கள் இந்தப்பரிக்ஷைகளினு லாயினும் இலக்கணங்களில் வல்லவர்கள் ஆகலாம் என நினைக்கிறேன். இக்காலத்தில் ஆதரவற்றிருக்கும் தமிழ்ப்பாஷையை இத்தகைய ஏற்பாடுகளினுல் மேன்மேலும் அபிவிருத்திக்குக் கொண்டுவரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாருக்கு நாம் செய்யும் கைம்மாறுதா னென்னே? தென்மொழியினருமை பெருமைகளை யறியும் சீமானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குத் தலைவரும் செந்தமிழ்ப் புலவருமாய் நின்று மெய்வருத்தம் பாராது தமிழ்நாட்டிற்கு இதஞ் செய்தலையே தமது முக்கியமான கருமமெனக் கங்கணம் பூண்டு விளங்குகிறவரான ஸ்ரீமத் ம-ா-ா-ஸ்ரீ, பாண்டித்துரைத்தேவர் அவர்கட்கு, தமிழபிமானிகளும், இத்தென்னுட்டார் எல்லாரும் நன்றியுள்ளவர்களா யிருப்பார்களாக.

மேலும், இந்தப் பரிக்ஷைகளில் முதல்திறமாய் தேறுபவர்களில் முதல் மூன்று மாணுக்கர்கட்குச் சில பொருளுதவியும் செய்வதாய்ச் சங்கத்தார் பிரசுரம் செய்திருக்கிறூர்கள். இது மாணுக்கர்களுக்கு உற்சாகத்தை உண்டுபண்ணக்கூடிய விஷயம்தான். வருடந்தோறும் சங்கப் பரீக்ஷைகள நடந்துவரவேண்டியதைப்பற்றி சுந்தரமூர்த்தியும் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இப்போது கேவலம் மலினதசையையடைந்து, வாடி ஓர் மூலையில் போய் விசேஷமாய்ச் சீந்துவாரின்றிப் பதுங்கிக்கிடக்கும் தென்மொழியோ இனிக் கொஞ்சகாலத்திற்குள் செம்மையாய்த் தழைத்தோங்கும் என்பது திண்ணம்.

யூனிவர்சிடி தமிழ் பரிக்ஷைகளில் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் மொழிபெயர்ப்பு (Translation & Re-translation) ஒன்றுகயிருக்கிறது. அதைச் சங்கப் பரிக்ஷைகளில் நீக்கப்பட்டிருக்கிறது. தமிழில் தேர்ச்சி

பெருத சில மாணுக்கர்கள் 'மொழிபெயர்ப்பு' என்று ஒன்றிருப்பதால் யூனிவர்சிடி பரிக்ஷைகளில் எப்படியோ தேறிவிடுகிருர்கள். அஃதில்லாமையால் சங்கப்பரிக்ஷைகளில் மாணுக்கர்கள் சாமர்த்தியம் செய்வது கூடாமையாக யிருக்கிறது. ஆதலால் மாணுக்கர்கள் நமது சுவய பாஷையான தமிழை இலக்கண இலக்கியங்களுடன் செவ்வனே கற்று பரிக்ஷையில் தேறவேண்டி யிருப்பதால், தமிழை அபிமானித்துக்கற்க விரும்புவோர், இப்பொழுது இங்கிலீஷ் பாடசாலைகளில் அலக்ஷியம் செய்வதுபோல் இனி முடியாது. ஆகையால் தமிழில் இலக்கண இலக்கிய வித்வான்கள் பெருகுவார்கள். மொழிபெயர்ப்பைச் சங்கத்தார்கள் நீக்கியிருப்பதால் ஆங்கிலத்திலுள்ள சிறந்த புத்தகங்களும் சாஸ்திரங்களும் தமிழில் மொழிபெயர்க்குந் திறமை சிறுவர்கட்கில்லாமல் போகுமெனச் சிலர் நினைக்கலாம். அது தவறு. ஏனெனில், சங்கப் பரிக்ஷைகட்கு வரும் மாணுக்கர்கள் விசேஷமாய் ஆங்கிலங்கற்ற உயர்தரவகுப்புப் பிள்ளைகளாதலால் அவர்கள் தங்களுடைய சிறிது முயற்சியாலேயே மொழிபெயர்ப்புக்களில் பாண்டித்தியமடையலாம்; அதுவிஷயத்தில் அவர்கள் கவலை எடுத்துக்கொண்டு உழைக்கவேண்டியவர்களே தவிர நாம் அக்கவலையுறக் காரணமில்லை. ஆகையால் சங்கப் பரீக்ஷைகளில் மொழிபெயர்ப்பில்லாமல் செய்திருப்பது பிள்ளைகள் தமிழின் அருமை யறிந்து வாசிப்பதற்கென்றே எண்ணவேண்டியிருக்கிறது.

சர்வகலாசங்கத்தார்களும் தமிழின் அபிவிருத்திக்கு இடையூருகச் சில ஏற்பாடுகள் செய்யத் தீர்மானித்திருப்பதாக வதந்தி உலாவிக்கொண்டிருக்கிறது. பூர்வத்தில் தென்னுட்டரயர்கள் எல்லாரும் நன்கு மதித்து ஆதரித்துவந்த இத்தமிழ் மேற்கூறிய இடையூற்றினுல் அடியோடு போகாமல், இப்போது சங்கத்தார்கள் அப்பாஷையைக் கைகொடுத்து ஆதரிக்கத் துணிந்தது அவர்கட்குப் பெருமையே.

இந்த வருஷத்தில் மெட்ரிகுலேஷன் வகுப்பினர்கட்குச் சங்கப் பரிக்ஷைகளில் கொடுபட்ட வினுப்பத்திரங்களைப் பார்த்த நான் என் சிற்றறிவிற் கெட்டிய மட்டில் எனது உண்மையான அபிப்பிராயத்தைக் கொஞ்சம் இங்கு எடுத்துரைத்தல் வேண்டுமென்றெண்ணுகிறேன், இவ்வாறு நான் எழுதப் புகுவதைச் சங்கத்தார்கள் தங்கள் வேலைகளில் ஏதோ நான் குறைகூற வந்ததாய்க் கொள்ளல் கூடாது. அவர்களுடைய வேலைகளில் குறைவுகள் சொல்ல யாவராலும் கூடாத காரியமே. மேலும், அவர்கள் உலோகோபகாரமாய் அடியோடு போகயிருக்கும் புராதன தமிழ் நூல்களைப் புதிப்பிக்கவும் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுடைய வேலைப்பாடுகளை மெச்சாதவர்களில்லை. ஆயினும் பரிக்ஷைகளில் கொடுபட்ட வினுப்பத்திரங்கள் விஷயத்தில் மாணுக்கர்கள் முன்னுக்கு வருமாறு அவர்களுடைய நோக்கத்தையும் தெரிந்த நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டுவதும் யுத்தமென்று இங்கெழுதலானேன். சங்கத்தார்களும் யோசித்துச் சங்கப் பரிக்ஷைகள் விஷயத்தில் மாணுக்கர்களுக் கனுகூலமாய்ச் சில ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நம்புகிறேன். எந்த விஷயத்திலும் ஒவ்வொருவரும் தங்கள் அபிப்பிராயத்தைக் கொடுக்கவேண்டியதும் யுக்தமான காரியமன்ரே!

தற்காலத்தில் மாணுக்கர்கள் இங்கிலீஷ் பாடசாலைகளில் தமிழ் கற்கு மாதிரியைக் கொஞ்சஞ் சொல்லிப் பிறகு நான் எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சொல்லுகிறேன். இதுகாறும் மாணுக்கர்கள் தமிழைச் சிரத்தையுடன் வாசிக்க முயலவே

யில்லை. இலக்கணத்தை முற்றிலும் கவனியாமலே தமிழ் கற்று வந்திருக்கிறார்கள். 'நன்னூல்' எவ்வளவு நல்ல நூலாயிருப்பினும் அதன் நலத்தைக் கொஞ்சமேனும் அவர்கள் எண்ணாமலே தமிழ் கற்று வந்திருக்கின்றனர். தமிழ் கற்பவர்கட்கு முக்கியமாய் இலக்கணப் பயிற்சி வேண்டும். அஃதில்லாவிட்டால் தமிழ் லக்ஷணமே போய்விடுமென்றே! நன்னூல் சூத்திரத்தைக் குருட்டுப்பாடம் பண்ணுவதினாலும் பயன் யாதொன்றுமில்லை. இலக்கியங் கண்டறிந்த பிறகே அதற்கு இலக்கணமியம்பவேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறது. இலக்கியப் பயிற்சியில்லாத சிறுவர்களுக்கு நன்னூலில் ஒரு அக்ஷரங்கூட பயன்படாது.

மேலும் பாடசாலைகளில் விசேஷமாய்த் தமிழ் உபாத்தியாயர்களைச் சிறுவர்கள் மதிப்பதில்லை. சிறுவர்கள் தங்களை மதிக்குமாறு செய்துகொள்ளச் சிலருக்குத் திறமையில்லை. உபாத்தியாயர்கள் இலக்கண இலக்கியங்களை மாணாக்கர்கட்குச் செம்மையாய்ப் போதிப்பதுமில்லை. அவர்கள் பிள்ளைகளைப் பழையபாடங்களை மறவாமல் வாசித்து வருகிறார்களாவென்று வினாவிடைகளினால் அறிவதுமில்லை. செய்யுள் வசன ரூபங்களாயிருக்கிற பாடங்களை மாத்திரம் பிள்ளைகள் கவனிப்பதுண்டு; அவைகளும் வேதாந்த விஷயங்களாயிருந்தால் கவனியார்கள். ஆங்காங்கு சிற்றின்பமான சிருங்காரம் தோன்றினால் பல்லையிளிப்பார்கள். அவற்றிலுள்ள இலக்கணங்களை வாத்தியார் எந்த சுவாமியின் புண்ணியத்தினாலோ சொல்லப் புகுவாரேயானால் பையன்களும் வகுப்பைவிட்டுச் சாக்குப்போக்குகளைச் சொல்லி நழுவ ஆரம்பிப்பார்கள். விசேஷமாய்த் தமிழ் வகுப்புகளில் சந்தைக்கூப்பாடும், சண்டை சச்சரவுகளும், கேலிப் பரிகாசங்களும், விளையாட்டுகளுமாகவே யிருப்பதைப்பலர் கண்டிருப்பார்கள். இப்படி வெகு சிரத்தையுடன் கற்கும் பிள்ளைகளுக்குச் சங்கத்தார்களுடைய வினாக்கள் அவர்களின் யோக்யதைக்குத் தக்கனவாயிருத்தல் நலம். சங்கப் பரீக்ஷைகளில் தேறி நலம்பெறுவதனாலாய பயன்களைக் கண்டு மாணாக்கர்கள் உத்சாகத்துடன் தமிழ் கற்கும் காலம் கூடிய சீக்கிரத்தில் வருமல்லவா? அப்பொழுது சிறுவர்களுக்குத் தமிழின் ஸ்வரூபம்இன்னதென விளங்கும். ஆதலால் வரவரச் சங்கப் பரீக்ஷைகளின் வினாக்கள் அப்பாஷையின் முழு வல்லமையுடன் கூடியிருக்கலாமென் றெண்ணலாயிற்று. ஆரம்பகாலத்திலேயே சங்கப் பரீக்ஷைகளின் வினாக்கள் முழுவல்லமையோடு கூடியிருந்தால் பிள்ளைகள் வெறுக்க ஏதுவாகிறது. பிள்ளைகள் வெறுத்தால் சங்கத்தார்களின் ஏற்பாடுகெட்டும் கொஞ்சம் மலினத்திற்கு இடமுண்டாகலாம். ஆரம்பத்தில் சிறுவர்கள் உற்சாகத்தையே அடைதல் வேண்டும். அவர்கள் முதன்முதலில் தமிழ்ப்பாஷையில் தேறுவோம் என்று ஆசையுற வினாப்பத்திரங்கள் கொஞ்சம் சுலபமாய் இருக்கலாம். இது சங்கத்தார்களுக்குத் தெரியாததன்று. இதுவரையில் அவர்கள் தமிழ்ப்பயின்றிருப்பதிலிருந்தே நாம் அதிகமாய் அவர்களிடம் எதிர்ப்பார்ப்பதும் யுக்தமன்றல்லவா? இதுவிஷயத்தைப்பற்றிச் சங்கத்தார்கள் தக்க ஏற்பாடு செய்வதுமன்றி நான் செய்யப்போகும் மற்றொரு விண்ணப்பத்தையும் தயவுடன் அங்கீகரிக்கவேண்டுகிறேன்.

அஃதென்னையெனின், இப்பொழுது ஏற்படுத்தியிருக்கும் பரிக்ஷை காலமானது பி. ஏ. வகுப்பினருக்கு ஏற்ற காலமாயிருக்கவில்லை என்பதுதான். ஏனென்றால், அவர்களுக்கு சென்ற 1902-ளு டிசம்பர்மாதம் 20உயில் சங்கப் பரிக்ஷைகள் நடந்தன, இனி வருஷந்தோறும் அதே தேதியில் பரிக்ஷை நடக்குமோவென்றுதான்அதிலுள்ளப் ப்ரதிகூலங்களைப் பற்றி இங்கெடுத்துச் சொல்லவேண்

டியிருக்கிறது. மெட்ரிகுலேஷன், எப்-ஏ, பரிக்ஷைகளுக்கு டிசம்பர்மாதம் 20வ உசிதமான காலமாயிருக்கலாம். அவர்களுக்கு டிசம்பர்மாதம் 6வக்குள் யூனிவர்சிடி பரிக்ஷைகள் முற்றுப் பெறுவதாலன்றோ? பி-ஏ பரிக்ஷைக்காரர்களுக்கு டிசம்பர்மாதம் 8-ம் தேதி பரிக்ஷை ஆரம்பமாகி நடந்துவருவதில் சிலருக்கு டிசம்பர் 19வயே பரிக்ஷை முற்றுப் பெறுவதால், ஒரே நாள் அவகாசத்தில் வேறு பரிக்ஷைக்குத் தயார் செய்துகொள்வது என்றால் கஷ்டமாயிருக்கிறது. இக்காரணத்தினலே தான் சங்கப்பரிக்ஷைக்கு வருவதாய்ச் சொன்னபேர்கள் ஒருவரும் வராமல் நின்றிருக்கலாமெனத் தோன்றுகிறது. அவர்களுக்கு சங்கப்பரிக்ஷைகளுக்கு வரக்கூடாது என்ற எண்ணமிருப்பதாக நாம் கொள்ளல்கூடாது. அல்லது சங்கப்பரிக்ஷைகளுக்குப் போகாமல் நின்றுவிட்டால் நாம் அடையும் நஷ்டமொன்றுமில்லை என்று எண்ணினவர்களுமல்ல. சங்கப்பரிக்ஷைகட்கெல்லாம் பி-ஏ வகுப்பினர்க்குச் செய்யும் பரிக்ஷை அதிக முக்கியமானதென்றும் பிள்ளைகள் அங்கீகரித்திருக்கிறார்கள். தினந்தோறும் ஆறுமணிநேரம் யூனிவர்சிடி பரிக்ஷைகளில் புத்தியைச் செலுத்தி ஒய்வில்லாமல் உழைத்து அலுத்திருக்கும் அவர்களுடைய மனமானது திடிரென மற்றொன்றில் திரும்புவதென்றாலும் கடினமல்லவா? சங்கப்பரிக்ஷைகள் இதர தமிழ்ப் பரிக்ஷைகள் போன்றதன்றாகையாலும், மற்றதைக் காட்டிலும் இதற்கு முயற்சி அதிகமாய் எடுத்து வாசிக்க வேண்டியிருப்பதாலும், பரிக்ஷைகளுக்குள்ள பாடங்களை ஸ்தூலமாய் ஓர் முறையாவது வாசிப்பதற்குக் காலம் போதாமையாலும், இரண்டு மூன்று மாதங்கட்கு முந்தியே மனனம்பண்ணியிருக்கிற இலக்கண இலக்கியங்களை மறுபடி ஓர்முறை பார்க்கக் காலம் போதாமையினலும், டிசம்பர்மாதம் 20-ம் தேதியில் வைக்கப்பட்டிருக்கும் மேற்படி பரிக்ஷையானது அந்தமாதம் கடைசியிலாவது அல்லது ஜனவரி முதல் வாரத்திலாவது மாற்றிவைக்க ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாயிற்று.

மேலும் சங்கத்தார்கள் தமிழ் பரிக்ஷைகள் எல்லாப் பட்டணங்களிலும் நடக்கும் வண்ணம் ஏற்பாடு செய்திருப்பதும் மாணுக்கர்கட்கு அதிக பொருட் செலவின்றி இலகுவாயும், சௌகர்யமாயும் இருக்கக்கூடிய விஷயமே. இந்தப்பரிக்ஷைள் முக்கியமாய் ஆங்கிலேயங் கற்கும் பிள்ளைகட்கானதால், அவர்களுடைய சுகதுக்கங்களைப் பற்றித் தீர்க்காலோசனை செய்து அச்சிறுவர்கட் கனுகூலமாயிருக்கும் நாட்களில் சங்கப் பரிக்ஷைகள் வைத்துக்கொள்ளுவார்கள் என்று பூர்ண நம்பிக்கை யுள்ளவனுக யிருக்கிறேன்.

ஆகையால் சங்கத்தார்கள் மேற்கூறிய இரண்டு விஷயங்களையும் ஆலோசித்து அவர்கள் யுக்தானுசாரம் பிள்ளைகட்குச் சௌகர்யமான ஏற்பாடுகள் செய்வார்களாக.

இப்படிக்கு நமது நாட்டில் தமிழ் விருத்திக்குக் காரணமாயிருக்கிற தமிழ்ச் சங்கத்தார்கள் சிரத்தையுடன் செய்யும் காரியங்களை மிக்க ஆவலுடனே பார்த்துக் களிப்படையும்,

கா. வே. சுப்பிரமணியம்.

கங்கையும் காவேரியும்.

இப்பூவுலகின்கண் உள்ள கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி, துங்கபத்திரை, தாம்பிரபர்ணி, கிருஷ்ணவேணி, பினாகினிமுத

லான எல்லாநதிகளும் சேர்ந்து, ரூபலாவண்யமுள்ளவர்களும் நல்லயுவதிகளுமான ஸ்திரீரூபந்தரித்து ஓர்காலத்தில் கங்கையாற்றின் மணற்றிட்டில் விநோதமாய் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது பிரமபுத்திரராகிய நாரதயோகீந்தரரானவர் அவண் வந்து அஞ்சலியஸ்தராய் அவர்களை 'நோக்கி 'நமஸ்காரம்' என்றார். அவர்களிலொவ்வொருவரும் தங்கள் தங்களையே நமஸ்கரித்ததாக பிரஸ்தாபிக்க, அதற்கு மற்றவர்கள் உடன்படாமையால் நாரதரை நோக்கி, 'நீர்யாருக்கு நமஸ்காரஞ் செய்தீர்?' என்று கேட்க, அவர், 'ஏ, ஸ்திரீரூபந் தரித்த புண்ணியநதிகாள்! உங்களில் யார்சிரேஷ்டையோ அப்புண்ணியவதிக்குத்தான் நான் நமஸ்கரித்தது' என்று விடைதந்தார்.

அப்பொழுது அங்கே யிருந்த தீர்த்தரூபங்களான யுவதிகள் வெட்கி, 'யாருக்கா யிருக்கலாம் இம்முனிவருடைய நமஸ்காரம்?' என்று ஐயுறலெய்திக் கொண்டிருக்கையில், கங்காதேவியானவள், 'ஏ, தோழிகாள்! சமஸ்தமான தீர்த்தங்களுச்கும் நானே சிரேஷ்டமானவள் என்பது நீங்களறியாததோ; ஆகையால் நாரத முனிவர் செய்த வந்தனம் என்னைக்குறித்தேதான்', என்றாள். பிறகு' "பொறுமையே யாவருக்கும் பெருமையை யுண்டாக்கும்" என்பதற்கிணங்க, கங்கையின் மொழிக்கு மற்றைய பெண்கள் செவிகொடுத்து மறுமொழி பகருகிறார்களாவென்று சுற்றிலும் பார்த்துவிட்டுச் சாந்தமே உருவாய்க்கொண்ட காவேரி தேவியானவள், மிகவும் அமரிக்கையாயும், வினய சம்பத்துடனும் 'ஏ. சகிமார்களே! பிரமபுத்திரரான நாரதமுனிவர், கங்கையின் அபிப்பிராயப்படி தான் செய்த நமஸ்காரம் கங்கைக்குத்தான் என்றொப்புக்கொண்டால் சரிதான்;' என்று மாத்திரம் சொல்லி மௌனமா யிருந்தாள். கங்கை உடனே மனம்பொறாமல், 'அடி காவேரி! பின் யாருக்கு அவர் வந்தனஞ் செய்தார்? நதிகளில் சிரேஷ்டமானவள் என்னைவிட யாரென்று இருக்கிறாய்? உலகத்தில் எல்லோரும் இதர தீர்த்தங்களைக் கூட 'கங்கை, கங்கை' என்றும் அதில் ஸ்நாநம்பண்ணும்போது "கங்காஸ்நாநமகம்கரிஷ்யே" என்னு மந்திரம்சொல்லி ஸ்நாநம்பண்ணுவார்கள்; கங்கா யாத்திரைக்குப் போகிறேன், என்று வெகு பிரயாசத்துடன் பயணம் புறப்பட்டுவந்து என்னுடைய தீர்த்தத்தில் நீராடியன்றோ தங்கள் தங்கள் பாபத்தைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள்', என காவேரி: என்னடி கங்கா! கொஞ்சமேனும் லஜ்ஜையில்லையே; ஸ்திரீகளுக்குள்ள தன்மைகளில் ஒன்றாகிய அடக்கமென்பதில்லாமற் மிகவும் செருக்குற்று வார்த்தைபேசுகிறாய்; "குலத்தளவே யாகும் குணம்" என்பது சரியாய்ப் போயிற்று; நீ மலைக்குப் பெண்ணாய்ப் பிறந்தமையால், அம்மலையைப்போல் ஜடசுவபாவமே உனக்குமுளது; நீ வாய்க்கு வந்தபடி பிதற்றுகின்றனை' என்றாள்.

நாரதர்:—(தனக்குள்) 'சரி, நாம் வந்த காரியம் சபலமாயிற்று; இனி தீயானது சரியாய்ப் பற்றும்; கொஞ்சம் மூட்டிவிடவேண்டியபடி நாம் தீயை மூட்டிவிட்டோம்; சற்றுயிருந்து வேடிக்கையும் பார்ப்போம்' என்று வாளாவிருந்தார். மற்ற தீர்த்த ரூபங்களான பெண்கள் தங்கள் தங்கள் பாபத்தைக் காவேரியில் ஸ்நானம் பண்ணிப் போக்கிக் கொள்ளுவதினாலும், கங்கையின் மகத்வமும் உலக பிரவித்தமான படியினாலும் ஒன்றுஞ் சொல்லாமலே யிருந்தார்கள். **கங்காதேவியானவள்**, 'அடி காவேரி! நான் சொல்வதைச் சாவதானமாய்க் கேள்; என்னுடைய இருகரைகளிலேயும் அனேக புஷ்ப பலங்களைக் கொடுக்

கும் விருக்ஷங்களிருக்கின்றனவே !' என, காவேரி, 'அடி, கங்கா ! நான் நதியாய்ப் புறப்பட்டு வருமிடமான சஹ்யபர்வதமுதல் சமுத்திர சங்கமம் வரையில் ஒருயிடம் பாக்கியில்லாமல், மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம் முதலான புஷ்பங்களும் மா, பலா, கொய்யா, மாதுளை முதலிய பலங்களைக் கொடுக்கக்கூடிய விருக்ஷஜாதிகள் நிறைந்திருக்கின்றனவே : பின்னுமென்னுடைய இருகரைகளிலேயும் தெங்கு, கமுகு ஏராளமாயிருக்கின்றனவே ; அவைகள் உன்னிடமில்லையே ; அன்றியும், நான் பூர்வத்தில் இந்திரன் சீர்காழியில் வைத்த நந்தனவனத்தில் புஷ்பவிருத்தி செய்தற்பொருட்டே அகஸ்தியமுனிவர் கமண்டலத்தினின்றும் பிரவகித்தவளாயிற்றே !' என்றாள்,

கங்கை :—'அடி ! நான் வரும் வழியில் காஸ்மீரம் என்றொரு தேசமிருக்கிறது. அதை விட சிலாக்கியமான பிரதேசம் இப்பூமண்டலத்தில் கிடையாது. அந்தப்பிரதேசத்தில் ஒரு தடவை விதைத்தால் ஆறுமாதத்திற்கொருதரம் பலத்தைக் கொடுப்பதுமல்லாமல், பன்னிரண்டு வருஷம் வரையில் மறுகாம்புகள் கிளைத்துப் பலத்தைக் கொடுத்து வருகின்றது ; உன் கரையிலுள்ள உபயோகமற்ற பிரதேசங்களில் உழுதும், விதைத்தும், பயிர்களைப் பிடுங்கி நட்டும், பிரயாசப்பட்டு பலனை யடையவேண்டி யிருக்கிறது.'

காவேரி :—'அடி ! நீ ஏதோ சிலாக்கியமாய் காஸ்மீர தேசமொன்றிருக்கிறதென்று பேச வந்துவிட்டாய்; என் கரைகளிரு பக்கங்களிலும் உற்பத்திமுதல் சங்கமம் வரையில் பற்பல சிலாக்கியமான தேசங்கள், பட்டணங்கள், இரமணியமான நந்தனவனங்கள், தோப்புகள், வயல்கள் இருக்கின்றன ; நவதானியங்களும் விளைகின்றன ; என்னிடம் உலகத்திலுள்ள எல்லாவித விளைப்பொருள்களு முற்பத்தியாகின்றனவே.'

கங்கை:—'என்னடி, காவேரி ! நான் சொல்லச்சொல்ல நீட்டிப் பேசுகிறாய் ? நான் திவ்வியமான காசிக்ஷேத்திரத்தைக் கொண்டிருக்கிறேன் ; 'காச்யாந்து மரணாந்முக்தி:' என்று எல்லாப் பிராணிகளும் வந்து என்னுடைய தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணித் தங்கள் பாபங்களைப் போக்கி மோக்ஷத்தை அடைகிறார்கள் ; மேலும், 'விஸ்வநாதர்' 'விசாலாக்ஷி,' என்று ஈசுவரனும் பார்வதியும் சான்னித்தியமாய் இருக்கிறார்கள். யாத்திரா வருபவர்கட்கெல்லாம் தரிசனம் கொடுத்து முக்தியடையச் செய்கிறார்கள்.'

காவேரி:—'அடி ! நீ எதோ ஒரு க்ஷேத்திரம் அத்திப்பூத்தாப்போல் இருப்பதைப் பிரதானமாகச் சொல்லுகின்றனை. என்னுடைய இரு கரைகளிலேயும் சஹ்ய பருவமுதல் சமுத்திர சங்கமம் வரையில் காசி க்ஷேத்திரத்தைப் போன்றதாயுள்ள அனேகமாயிரஞ் சிவவிஷ்ணு க்ஷேத்திரங்களிருக்கின்றனவே; மேலும் மரணத்துன்பமில்லாமல் தரிசன மாத்திரத்தில் முக்தி தருவதான சிதம்பர க்ஷேத்திரமிருக்கின்றது. அனேக பிரமண்ணியங்கள்என் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி வேத கோஷங்களுடன் அநேகவித யக்ஞ யாகாதிகளைச் செய்து கொண்டிருக்கிறார்களே; அத்தகைய பிரம்மண்ணியங்கள் நீ என்னிடம் பிச்சையெடுத்தாலும் கிடைக்கமாட்டார்களே. உன் கரைகளில் பெரும்பாலும் மிலேச்சர்கள் குடிகொண்டிருக்கிறார்களே யல்லாமல், உத்கிருஷ்டமானவர்கள் சுசியாய் யாருமில்லையே ; எனக்கு முனக்கு மொருநாளு மீடாக மாட்டாதடி!'.

கங்கை:—'அடி ! போடி போ. நீகேவலம் இப்பூமியிலுள்ள சஹ்ய பர்வதத்தாழ் வரையில் ஓர் குரு முனிவனால் கடத்தில் அடைக்கப்பட்டனை. பின்னர் கடம்கவிழ்ந்தமையால் சுவல்ப பிரவாகத்தை அடைந்தனை, நானோ விண்ணுலகிலும் மண்ணுலகிலும் பாதாளத்திலும் பிரவகித்துக் கொண்டிருக்கின்றமையால் 'திருபதகை' என்னும் பேர்படைத்திருக்கின்றதை நீயறியாயோடி! பின்னும் யமுனை ஸரஸ்வதி என்ற நதிகளும் என்னைவந்தடைகின்றன? அந்தயிடத்தில் 'திரிவேணி' என்னும் பெயருடன்விளங்குகின்றேன். அளவிடப்படாத 'பிரயாகை,' என்னும் திவ்விய க்ஷேத்ரமும் என்கரையில்இருக்கிறது? நீயோஎனக்கீடு?'

கரோவரி:—'அடி! ஊரெல்லாஞ்சுற்றினாலும் தேர்முடிவில் தன்னிலையில் வந்துதானே ஆகவேண்டும்; நீ ஆகாயம் போனால் தானென்னை? இன்னுமதற்கு உயரப்போனால்தானென்ன? கடைசியில் இவ்வுலகத்திற்குத்தானே வந்தனை; வீண் பிரதிஷ்டை ஏன் ?'

கங்கை:—'அடி! கேவலம் இருஷி பத்தினியாயிருந்து, அவருக்கடிமைத்தொழில்கள் பலபுரிந்து' கடைசியில் அவருடைய சௌசபாத்திரத்தின் வழியாய்உற்பத்தியடைந்து நதியான உனக்குவாய் என்னடி ?'

காவேரி:—'அடிகங்கை? நீஆதிமுதல் செருக்குற்றழிகிறாய், நீஎவ்விதத்திலும் எனக்கீடாகமாட்டாய். என் மகிமையும் என்னைப் பத்தினியாகக்கொண்ட மகரிஷியான அகத்தியமகாமுனிவரின் அபாரசக்தியையும் நீயறிந்திருந்தால் இவ்வாறு பிதற்றமாட்டாய். அகத்தியராயினும் பிராமணோத்தமர். நீ ஓர்க்ஷத்திரியனைக் கூடி காங்கேய னென்னப்படுகிற பீஷ்மனைப் பெற்றனையே. உன்வாயாலே நீ கெடுகிறாய். வேண்டாம், வாயைமூடு, "கிணருவெட்டப் பூதம் புறப்பட்டது போலா" கும்;'

கங்கை:—'நீ மாத்திரம் சகலமும் தெரிந்து பேசுகிறாயோடி ? கொஞ்சஞ் சொல்லுகிறேன், கேள், என் மகிமையை. அயோத்தி வேந்தனாகிய சகரமகாராஜா அசுவமேதயாகஞ்செய்ய உத்தேசித்துக் குதிரையை விடுத்தனர் ; தேவராஜா அக்குதிரையைத் தந்திரமாய்ப் பிடித்துப் பாதாளலோகத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த கபில முனிவர் ஆச்சிரமத்தில் கட்டினர் ; அதைச் சகர புத்திரர்களானசாகரர்கள் உணர்ந்து, பூமியைப்பறித்து அங்கு சென்று குதிரையைப் பிடித்துவரப் போனபோது, கபிலர் அவர்களைப் பஸ்பமாய் எறித்தனர் ; நிர்க்கதியாய்ச் சாம்பலான சாகரர்களை நான் சென்று உத்தாரணம் செய்திருக்கின்றேன். நீ யவ்வாறு யாரை உத்தாரணஞ் செய்திருக்கிறாய் ? "வாய் புளித்தது மாங்காய் புளித்தது" என்று கூடக்கூட வக்கணை பேசினால் ஆய்விட்டதோ ?'

(இன்னும் வரும்.)

ADMINISTRATION OF THE MADRAS PRESIDENCY.

சென்னை இராஜதானி துரைத்தனம்.

1901-02 ஆம் வருஷத்திற் சென்னை இராஜதானியின் துரைத்தனத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டார் தம் ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கிறார்கள். அதனிலடங்கிய முக்கியமான அமிசங்களை இங்கு சுருக்கமாய்க் குறிப்போம்.

"மொத்தத்தில் இந்த வருஷம் ஸுபிக்ஷமானதே. சில இடங்களில் அதிக விலைகளினாலும் தானியக்குறைவினாலும் ஏழைகளுடைய கஷ்டத்தை நிவர்த்திக்கக் கவர்ன்மெண்டார் முன்வரவேண்டி யிருந்தபோதிலும், காலத்தின் இயல்பு விவசாயத்திற்கு ஏற்றதாகவே இருந்ததென்னலாம். நிலவரியும் இதரவரிகளினால் ஆகும் வரும்படியும் அதிகமாய் வசூலாயின. இதனை யநுசரித்து நாட்டிற் பெருங்குற்றங்கள் குறைவுபட்டன. இறக்குமதிச் சரக்குகளின் விலையதிகரித்தது, தேசாந்தரம் போனவர்கள் குறைவு பட்டனர். ஆயினும், இந்த வருஷத்திற் பிறந்தவர்களின் கணக்கு குறைந்தது, இறந்தவர்களின் கணக்கு அதிகரித்தது; சென்னையில் இறந்தவர்கள் வெகு பேர். முன் வருஷத்தைவிட, காலரா (வாந்திபேதி) மும்முரமாய் பரவிக்கொன்றது: இவ்விராஜதானியின் எல்லைப்புறங்களிற் பிளேக் குடிகொண்டது: சட்ட நிர்மாண சம்பந்தமான காரியங்கள் இவ்வருஷத்தில் விசேஷமாய் நடக்கவில்லை யெனினும், நீர்ப்பாய்ச்சற் கமிஷனுக்காகவும், ஸிம்லாவிற்கூடிய கல்விச்சங்கத்திற்காகவும், போலீஸ் சீர்திருத்தத்தைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டுக்கு நமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்காகவும் நாம் முயற்சித்துச் செய்த ஏற்பாடுகளினால், இனி சீக்கிரத்தில் இங்கு துரைத்தனச் சீர்திருத்தங்கள் நடந்தேறுமென்று நினைப்பதற் கிடமுண்டு."

இந்த வருஷத்தில் ரயத்துவாரியிலும் இதர வகைகளிலும் நிலவரியின் மொத்தம் 25½ லக்ஷம் அதிகப்பட்டது. வஜா செய்யப்பட்ட நிலவரித்தொகை முன் வருஷத்துத்தொகைக்குப் பாதியிலுங் குறைந்தது. நிலவரியும் இதர வரிகளுமாக ஏறக்குறைய 6½ கோடி ரூபாய் ஆகின்றது; அஃதாவது முன் வருஷத்தைவிட 30 லக்ஷம் ரூபாய் அதிகம். இதனில் 43 லக்ஷம் பாக்கி நிலுவை போக, மீதியெல்லாம் வசூலாய்விட்டது. இங்ஙனம் அதிகமான வரியில் எவ்வளவு ஸெட்டில்மெண்ட் டிபார்ட்மெண்டாருடைய காரியத்தினால் அதிகப்பட்டதென்னும் விவரம் இந்த ரிபோர்ட்டினால் தெரியவில்லை. இவ்வருஷத்தில் நான்கு ஸெட்டில்மெண்டு பார்ட்டிகள் வேலைசெய்தன. மலையாளம் ஜில்லாவில் முதன்முதலாக ஸெட்டில்மெண்டு செய்தது இவ்வாண்டின் முக்கியமான வேலையாகும். இதனாலும் முன் வருஷத்தில் நடந்த இதர ஸெட்டில்மெண்டு காரியங்களினாலும் நிலவரி எவ்வளவு உயர்ந்திருக்கிறதென்று அறியக்கூடவில்லை. இந்த ஸெட்டில்மெண்டு இலாகாவின் வேலையினால் மொத்தத்தில் நிலவரி வருஷ மொன்றுக்கு 77½ லக்ஷம் ரூபாய் அதிகப்பட்டிருக்கிற தென்னலாம். அஃதாவது, இந்த இலாகா ஏற்படுவதற்கு முன் இருந்ததைவிட நூற்றுக்கு 21 வீதம் வரி அதிகப்பட்டிருக்கிறது. இவ்விராஜதானி யனைத்தும் முதல் தடவை ஸெட்டில்மெண்டு இன்னும் பூர்த்தியாகவில்லை. இப்படி வருஷாவருஷம் வரிச்சுமை யேறுவது எப்பொழுது நிற்குமோ சொல்லமுடியாது.

ரயித்துவாரி நிலங்களின் புன்செய் நூற்றுக்கு 0.3 வீதமும், நன்செய் 1.2 வீதமும் அதிகப்பட்டிருக்கிறது. விவசாயத்துக்கு விடக்கூடாத நிலங்களும், ஒருவரும் ஏற்றுக்கொள்ளாத சாகுபடியாகத் தக்க நிலங்களும் ஒப்புக்கொண்டு தரிசாய்க் கிடக்கும் நிலங்களும் குறைந்து போயின. 1875-76-ஆம் வருஷத்துக் கணக்குக்கு ஒப்பிட்டுப் பார்க்கின், 1.94-மிலியன், (ஒரு மிலியன்=10 லக்ஷம்) ஏகராக்கள் அதிகமாய் இப்பொழுது பயிரடப்படுகின்றன. இவ்வருஷத்தில் ரயித்துவாரிப் பட்டாக்கள் நூற்றுக்கு நான்கு வீதம் அதிகப்பட்டிருக்கின்றன.

சென்னைச் சட்ட நிர்மாணசபை ஆறுமுறை கூடியது. அதனில் தீர்மானிக்கப்பட்டசட்டம் சென்னைக்கோர்ட் ஆப்வார்ட்ஸ் ஆக்ட் ஒன்றே.சட்டத்திற்குட்பட்டகுற்றங்கள் குறைந்தன ; பெருங் குற்றங்களுங் குறைவே. ஆயினும், கூட்டக்கொள்ளைகளும் களவுகளும் அதிகமாகவே இருந்தன. குற்றவாளிகளைக் கண்டுபிடித்தது, முக்கியமாய்ச் சொத்துக்காகச் செய்த பெருங்குற்றங்களில் மிக்ககுறைவு. முன் வருஷத்தைவிட கிரிமினல் கோர்ட்டுகளில் ரிபோர்ட் ஆன குற்றங்களின் சங்கியை அதிகம் ; சிறைச்சாலை தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் சங்கியை குறைந்தது. இவ்வருஷத்திற் பதிவான வியாஜ்யங்கள் குறைவு. அப்பீல்கள் அதிகம். ரிஜிஸ்டரான பத்திரங்களின் சங்கியை இதுவரையில் எந்த வருஷத்திலுமில்லை. முனிசிபல் கௌன்சில்களில் ஐரோப்பிய, யூரேஷிய மெம்பர்களைவிட இந்திய மெம்பர்கள் அதிகரானார்கள். முனிசிபாலிடிகளின் மொத்த வரும்படி 1900-01-ம் வருஷத்தைவிட நூற்றுக்கு 8-அதிகம் ; முனிசிபல் வரிவிதானம் ஐந்து தம்படி உயர்ந்தது.

இம்மாகாணத்து விவசாய இலாகாவின் வேலை திருப்திகரமாயில்லை. ரிசர்வ் காடுகளின் பரப்பு 500-முதல் 17,000 சதுரமைல் விஸ்தரிக்கப்பட்டது. அதற்கேற்ப ரிசர்வ் நிலங்களின் பரப்பு குறைந்தது. இந்த வருஷத்தில் இவ்விராஜதானியில் நடந்த கடல் வியாபாரப் பொருளின் விலை 30-கோடியே 83½-லக்ஷம் ரூபாய் புறத்தேயங்களோடும், ஆங்கிலேயருக்குச் சேராத இந்தியத் துறைமுகங்களோடும் இதர இராஜதானிகளிலுள்ள ஆங்கிலேய ஸ்தலங்களோடும் நடந்த வெளிவியாபார மொத்தம் 28-கோடியே 19½-லக்ஷம் ரூபாய் ; அஃதாவது முன் வருஷத்தைவிட 34-லக்ஷம் அதிகம். நீர்ப்பாய்ச்சலுக்காகச் செலவான பணம் 1900-01-ம் வருஷத்தைவிடக் குறைவு. முதற்போகம், இரண்டாம் போகத்தையுஞ் சேர்த்துப் பார்த்தால், நீர்பாய்ச்சப்பட்ட பரப்பளவு 68¾-லக்ஷம் ஏக்ராவாகும். இம்பீரியல், (இராஜாங்கத்து), புரோவின்ஷியல் (மாகாணத்து), லோகல் (உள்ளூர்) பண்டுகள் (நிதிகள்) எல்லாவற்றிலுஞ் சேர்ந்துவந்த மொத்த வரும்படி ரூபாய் 1,699¼ லக்ஷம் ; செலவு ரூபாய் 982½-லக்ஷம் ; மிகுந்த லாபம் 716¾-லக்ஷம் ; அஃதாவது, முன் வருஷத்தைவிட ரூபாய் 21½-லக்ஷம் அதிகம். கடற்சுங்கத்தினால் வந்த வரும்படியும், அபினியினால் வந்த வரும்படியும், நிரம்ப அதிகப்பட்டன. முன் வருஷத்தில் 186¼-லக்ஷமாயிருந்த உப்புவரி இவ்வாண்டில் ரூபாய் 191½-லக்ஷமாய்விட்டது. லாஹிரி வஸ்துக்களின் வரியும், ஸ்டாம்பு வரியும், விதிக்கப்பட்ட வேறுவரிகளும் கூட அதிகப்பட்டன.

மேற்சொல்லியவை இவ்விராஜதானி துரைத்தனத்தைப்பற்றி முக்கியமான விஷயங்களாகும். இது கவர்ன்மெண்டாரது ரிபோர்ட்டின்படி எடுத்த கணக்கு; அவ்விவரங்களினால் அறியக்கூடியவை இன்னவென்று நாம் கவனித்துத் தெரிந்துகொள்வோமாக.

இந்து நேசன்.

சாபத்நி மாதாவின் கொடுமை.

சாபத்நிக மாதாக்களினால் குடும்பங்களில் கொடுமைகள் பலசெய்யப்படுவதைப்பற்றிய அநேககதைகளை நாம்படித்திருப்போமாயினும் இப்போது சொல்லப்போகும் கோரக்ருத்தியத்தை நாம் ஒருநாளும்

காதினுல் கேட்டுமிரோமென்பது திண்ணம். கொஞ்சநாளைக்குமுன் ஓர் ஸ்திரீயானவள் தன்சக்களத்தியின் 8-9 வயதுள்ள ஓர்பையனை சிறு துண்டங்களாயரிந்துக் கறிசமைத்ததாய்த் தஞ்சை ஜனனுகூலன் பத்திரிகை கூறுகின்றது. இவள் மனிதகணமாயிருப்பாளேல் இத்தகைய கொடுமை புரிந்திராள்; இவளை இராக்கதகணமென்றே சொல்லவேண்டும். இவள் வசிக்குமிடம் ஐதராபாத்தாம். இவள்புருஷனுக்குப் பட்டாளத்தில் சிப்பாய்வேலையாம். நிஜாம் இராஜ்யத்தைச்சேர்ந்த சிப்பாயென்று சொல்லுகிறார்கள். சிப்பாய் வீட்டிலில்லாத சமயம்பார்த்து அவன் மனைவிதன் கொழுநனைத் துரோகம்பண்ணித் தனக்கிசைந்த வேறு சோரநாயக னொருவனைத் தன்னுசை நாயகனுகவைத்துக்கொண்டு சுகமாய்க் காலங்கழித்துக்கொண் டிருக்குங்கால், ஒருநாள் அவள் தன் கள்ளக்காதலனோடு சரசமாகவிளையாடிக்கொண் டிருக்கையில், சிப்பாயின் இறந்துபோன முதல்தாரத்தின் (சக்களத்தியின்) குழந்தைப்பையன் கண்டுவிட, நாயக நாயகிமார்கள் இருவரும் திடுக்கிட்டார்கள். அப்பொழுது காதலன் காதலியை அணைத்துக்கொண்டு, 'ஓ, பிராணமே உருவாய்க்கொண்ட என் ஆசைக்கண்ணாட்டியே! நமக்கு அனர்த்தம்இந்தப் பையன்மூலமாய்ச் சம்பவிக்கும் என்பது நிச்சயம். ஆயினும் இந்தப் பையன் தன்தகப்பனிடம் தங்கள் சோரத்வத்தை உரைக்காதிருக்குமாறு பாதுகாத்தல் வேண்டும்;'' என்றுமாத்திரம் எச்சரித்துத் தன்னிருப்பிடஞ் சென்றான். உடனே சிப்பாயின் மனைவிபையனை அழைத்துப் பயமுறுத்தி, உன்தகப்பனிடம் ஏதேனும் இன்றுநீகண்டதை உரைப்பாயேல், உன்னைக் கண்டதுண்டமாய் வெட்டிக் கொன்றுபோடுவேன், பத்திரம், என்று அவனுக்குக்கண்டிப்பான உத்தரவளித்தாள். பிறகு பையன் வழக்கப்படி பள்ளிக்குச்சென்றான். அங்குதன் உபாத்தியாயரிடம், 'ஐயா! என்னை வீட்டிற்கு அனுப்பவேண்டாம், என்னை என் சிற்றன்னை வெட்டிக் கொன்றுபோடுவாள்,' என்று நிகழ்ந்தவற்றை ஒளியாமல் சொன்னான். உபாத்தியாயர் சிரித்துக் குழந்தைப் பையனுதலால் அலக்ஷியமாகவே இவன்வார்த்தையை மதியாமல் போஜனத்திற்கு வீட்டிற்கனுப்பினர். சிற்றன்னையோ தன் கொடும் எண்ணத்தையே சாதிக்கவெண்ணிப் பையனைப்பிடித்துக் கண்டதுண்டமாய் வெட்டிச் சிறு துண்டங்களாகவரிந்து ஓர் சட்டியில்போட்டு அடுப்பில்வைத்துச் சமைத்தனளாம். அன்று சாயரக்ஷை வீட்டிற்கு வந்த சிப்பாய் மகனைக் காணுமல் தன் மனைவியைப்பார்த்து ''மகன் எங்கே?'' என்று கேட்டான். அவள், 'மகன் பள்ளியிலிருந்து இன்னும் வரவில்லை' என்று புகன்றாள். சிப்பாய் மனங்கேளாது பள்ளிக்குச் சென்று உபாத்தியாயரைக் கேட்க, அவர் 'பையன் அப்போதே இல்லமேகினன்' என்றும் அவன் காலமே

தன்னிடம் மொழிந்தவைகளையும் சொன்னார். உடனே சிப்பாய் போலீஸ் உதவியோடு தன் வீடு சென்று சோதிக்குமளவில் அடுப்பில் வெந்து கொண்டிருக்கும் குழந்தையினது மாமிசத்துண்டங்களைப் பார்த்தபோது அவன் மனம் எங்ஙனம் தவித்ததோ ? ஐயோ ! அதை இங்கு விஸ்தரிக்கவும் வேண்டுமா ? உடனே அவ்வரக்கியைப் பிடித்து விலங்கிட்டு அவளுடைய ஆசைக்கணவனையுஞ் சேர்த்துப்பிடித்துக் கைதியாக்கிக்கொண்டு போனார்கள். கள்ள புருஷனோ, தான் ஏதோ அவளை நேசித்திருந்தது உண்மையென்றும், பையனைக்கொன்றது யாதொன்றும் தெரியாதென்றும் சொல்லுகிறானாம். அந்நாட்டு வழக்கத்தின்படி சிப்பாயின் மனைவியாகிய அக்கொலைபாதகியை யானையின் பின்னங்காலில் கட்டி, தெருத்தெருவாய் இழுத்துக்கொண்டு மாஜிஸ்திரேட்டாரிடம் கொண்டுபோய்த் தக்க சிக்ஷை விதிப்பாரென்று வதந்தி உலாவுகிறது. இத்தகைய கொடுமை அளவிற்குமிஞ்சிய கள்ளப் புணர்ச்சியால் விளைந்த தன்றோ ! மாணிடர்காள்! கள்ளப் புணர்ச்சியால் உண்டாகும் அல்ப வின்பத்தை மனதிலும் எண்ணாது அறிஞரால் சொல்லியிருக்கிறவிதிகளின்படி ஒழுகி நடப்பதற்கு முயல்வீர்களாக.

சுகாதாரத்தைப் பற்றிய விசேஷக் குறிப்புக்கள்.

---

25. சரீர சுகமே மனிதனுக்கு முதன்மையான நன்மை.

26. சுகமாயிருக்கையில் நாம் நம்முடைய சொந்த வேலைகளைச் செய்துகொள்ளுவது மல்லாமல் பிறருக்கு மியன்ற உதவி செய்யலாம்.

27. சுகஹீனம் மனிதனுக்குப் பெரிய கேடு.

28. சுகமென்றால் நாம் சாப்பிடுகிற ஜீர்ண பதார்த்தங்களை ஜீரணக் கருவிகள் ஜீர்ணிக்கச் செய்தும் அதனால் இரக்தம் பெருகி, இரக்தக் கருவிகள் அதைத்தேக மெங்கும் வியாபிக்கச்செய்தும், சுவாசக்கருவி சுத்தமான ஆகாயத்தை உட்கொண்டு இரக்த சுத்தி செய்தும், சரீரத்திலுள்ள பல கருவிகளும் தத்தம் வேலைகளை வருத்தமின்றிச் சுலபமாய் நடத்திக்கொண்டு வருவதுமாம்.

29. அளவுக்கு மிஞ்சின போஜனத்தையாவது, சுகத்துக்குத்தகாத பதார்த்தங்களையாவது ஒருவன் சாப்பிட்டால் ஜீர்ணக்கருவிகள் சேதப்படும்.

30. ஒருவன் அளவுக்கு மிஞ்சி கவலை யடைந்து, மனோமுயற்சிகளுக்கு இடங்கொடுத்தால் புத்திக்கு ஆதாரமான மூளை சேதமடையும்.

31. ஒரு ஊரில் ஒட்டுவா ரொட்டி வியாதிகள் நடமாடும் பொழுது அந்த ஊரில் குடியிருக்கக்கூடாது. அசுத்தமான இடங்களிலும் குடியிருக்கக்கூடாது, தங்களைச்சூழ்ந்து நாற்றமுள்ள குப்பைகளைக் குவிக்கக்கூடாது. கட்டுக்கடையான துர்க்கந்தங்களை உண்டாக்கக்கூடிய அல்லது

துர்க்கந்தமுள்ள தண்ணீரை குட்டைகளாகத் தேங்கவிடக்கூடாது. கண்டபடி தகாத பதார்த்தங்களை உட்செலுத்துவதும், பானங்கள் செய்வதுங் கூடவேகூடாது.

32. மேற்கூறிய வண்ணம் நாமிராவிட்டால் நம்மை வியாதி பீடிக்கும்.

33. வியாதியினாலேயே நமக்குண்டாகு மாறுத லென்னையெனின்: நம்முடைய பலத்தை யொடுக்கி, நம்மைச் சுற்றி யிருப்பவர்கட்கு நம்மைச் சுமையாக்குகிறது.

உண்மையை மொழிதல்.

(சிறுவர்கட்கு)

ஒரு காலத்தில் ஜியார்ஜி என்றொரு சிறுபையனிருந்தான். அவன் தந்தை யொருநாள் அவனுக்கு விளையாட ஓர் சிறு அரிவாளைக் கொடுத்தார். அதற்கு அவன் மகிழ்ந்து, அரிவாளுடன் தன் தோட்டத்துக்குச் சென்றான். அங்கு அவன் சுற்றித்திரிந்து அவனுக் கெதிர்ப்படும் செடிகொடிகளை அரிந்துவந்தான். கடைசியில் அவன் ஓர் இலந்தை மரத்தண்டைவந்து தன் அரிவாளை அதில் பிரயோகிக்க முயன்றான். உடனே அவன் மரத்தில் ஆழக் கொஞ்சம் வெட்டினான். பிறகு தோட்டத்தின் மற்றொருபக்கம் நோக்கிச் சென்றான்.

இந்த இலந்தைமரமானது ஜியார்ஜியின் தந்தையினால் நன்கு போஷித்து ஆதரிக்கப்பட்ட மரம். அதை ஜியார்ஜி முற்றிலு மறந்தான். அவன் தந்தை அம்மரத்தண்டை வந்து பார்க்கையில் தன் அன்பின்மிக்க நேர்த்தியான இலந்தைமரமானது ஏறக்குறைய அழிக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்று மிகவும் துக்கித்தான். உடனே தன்புத்திரனைநோக்கி 'ஜியார்ஜி! இது யாருடையவேலை?'' என்று கடிந்து மொழிந்தார். தனக்குத் தெரியாதென்றாவது இக்குற்றம் வேறு யாராலாயினும் செய்யப்பட்டதென்றாவது சொன்னானா? இல்லவேயில்லை. ஆனால் பெருக்கிய கண்ணீருடன் தன் தந்தையின் முகத்தை ஏரிட்டுப்பார்த்து, "தந்தாய்! நான் பொய்சொல்லமாட்டுவேன் இல்லேன். நான்தான் இவ்விலந்தைமரத்தை இவ்வாறு வெட்டினேன்'' என்றான்.

என்ன கண்ணியமுள்ள பையன் பாருங்கள்! உண்மையைச் சொல்லக் கொஞ்சமேனும் பயப்பட்டானில்லை. உடனே அவன் தந்தையானவர் ஜியார்ஜி செய்த பெருத்த குற்றத்தை மன்னித்தார். பையன்கள் உண்மையல்லாததைத்தான் அடிக்கடி சொல்லப் பழகுகிறார்கள். அப்படி நேரிடுங்கால் ஒவ்வொருவரும் ஜியார்ஜியைப்பற்றி நினைத்துப்பார்த்து அவனைப்போலவே "நான் பொய்சொல்ல மாட்டுவே. னில்லேன்'' என்று

சொல்ல முயலவேண்டும். குழந்தைகாள்! என்னவந்தாலும் என்? எப்போதும் உண்மையையே பேசுங்கள். அதனால் என்னவானாலும் சரி. தான் செய்த குற்றத்தை மறைப்போன் எப்போதும் குற்றத்தையே செய்பவனேயாவனல்லவா?

உலகிலுள்ள பெருந்தகையாளருக்குள் இக்கதா நாயகனை யையனும் ஒருவனாயினன். அவன்தான் ஜியார்ஜ் வாஷிங்டன் (George Washington) என்று பெயர்பெற்றவன்.

GENERAL NEWS.

சமாசாரக் குறிப்புக்கள்.

நன்னிலம் தாலுகாவில் திட்டச்சேரி ஓர்பெருத்த கிராமம். அதில்மகம்மதியர்கள் விசேஷமாய்க் குடிகொண்டிருக்கின்றனர். அதில் ஓர் பள்ளிவாசல் இருக்கிறது. கந்தூரி, உச்சவாரம்பமான ஜனவரி௴ 30உ வெள்ளிகிழமைதினம்கொடியூர்கோலம் நடந்தேறியது. அதில் ம-௱-௱ஸ்ரீ சையத்ராவுத்தர் அவர்கள் ரூ. 700 வரையில் செலவிட்டு 'சுல்தான்யர்' என்றோர் கப்பல்செய்வித்து விடுத்த கண்காட்சி புகழத்தக்கது. இவர்தன்பேரன் சீக்காயிருந்தகாலத்தில் செய்துகொண்ட பிரார்த்தனை நிமித்தம் வெகுபாடுபட்டு மேற்படிகப்பலைச் செய்வித்தனர். இவருக்கு ஜீவனம் பொடிக்கடை வியாபாரம்.

அமீர் அபிபுல்லா:—அப்கானிஸ்தானத்து அபிபுல்லா கானுக்கு லார்கோர்ஸனைப் பார்க்க இந்தியாவுக்கு வரவேண்டுமென்கிற உத்தேச மிருப்பதாகவும் இப்போது அவசரமாய்க் கவனிக்கவேண்டிய இராச்சியநிருவாக வேலைகள் அவருக்கு ஒய்வு ஒழி வில்லாமலிருந்து கொண்டிருக்கிறபடியால், அவைகளை யெல்லாம் ஒருவித சீர்படுத்திவிட்டு அவர் இராஜப்பிரிதிநிதியைப்பார்க்க வரக்கூடுமென்றும் சொல்லப்படுகிறது. எப்படியிருந்தபோதிலும் லார்டுகர்ஸனுடைய ஆட்சிக்காலம் முடிவு பெறுவதற்குள்ளாக அவரைப்பார்க்க அமீர் அபிபுல்லா இந்தியாவுக்கு நிச்சயமாய் வரக்கூடுமென்று கருதப்படுகிறது.

திருச்சேரை:—இது ஓர் மகாக்ஷேத்திரம். சிவ விஷ்ணு வாலயங்களுள்ளது. இத்தலத்தின் மகிமையை அறியாதார் ஒருவரும் இலர். ஸ்தலவிசேஷமும் மூர்த்திவிசேஷமும் தீர்த்தவிசேஷமும் ஒருங்கேயமையப்பெற்ற 'ஸாரக்ஷேத்திரம்' என்றதிருநாமத்தோடு விளங்கப்பெற்றது. இதில்வருஷந்தோறும் ஸாரநாதப்பெருமானுக்கு புஷ்யோச்சவம் சிறப்பாய் நடப்பதுண்டு, இவ்வருஷம் அவ்வுச்சவம் தர்மகர்த்தா ஆத்திக்குளம் கோவிந்தசாமி உடையார் அவர்களால் வெகுவைபவமாய்கொண்டாடபட்டது. இவர் இராப்பகலாய் இவ்வுச்சவத்திற்காக எடுத்துக்கொண்ட பிரயாசையின் மிகுதியைஎம்மனோரால் செப்பத்தரமின்று. ஆழ்ந்து நோக்கின், இக்கனவானைப் போன்ற அந்தரங்க பக்திமானும், தர்மிஷ்டனும், நியா நியாயங்களை அறிந்து நடக்கும் கருணாநிதியானவரும் இதற்கு முன்னும், இருந்ததில்லை. இனியும் இருப்பது அரிது என்று தஞ்சை ஜனநேசன் கூறுகிறான்.' ஏ, கோவில் மானேஜ்மெண்டு செய்யும் அதிகாரிகளே! ஜாக்கிரதை. பயந்து பிழையுங்கள். ஈசுவராபராதிகட்கு நற்கதி கிடையாதென்றெண்ணியே மேற்படி கனம் உடையா

ர்வர்கள் அறநெறியுள்ளவராக விருக்கின்றார். அவரைப்போலவே மற்ற எல்லாரு மிருப்பார்களாக.

வேலூரில் பிளேக் வியாதி:—வேலூரில் பிளேக் வியாதி ஆரம்பித்து விட்டதால் ஜனங்கள் மிகுந்த திகில் கொண்டிருக்கிறார்கள். அநேகர் பயந்து தங்கள் வீடுகளைவிட்டோடிப்போவதாகவும் தெரியவருகிறது. முதலிலே மண்டித் தெருவில் ஒருவனுக்கு இவ்வியாதி கண்டது. பிளேக் வியாதியுள்ள சில இடங்களிலிருந்து தானியம் இறக்குமதியாவதால், அதன் மூலமாயிவ்வியாதி வேலூருக்குத் தொத்திக்கொண்டு வந்திருக்கவேண்டியது. மண்டித் தெருவில் 12 பிராயமுடைய ஒரு இந்து பையன் இதற்கு முதலில் இரையானான். மண்டி வேலைக்காரருக்குள்ளேயே சிலர் இறந்தார்கள். அப்படிப்பட்ட கடைகளெல்லாம் சுத்தம் பண்ணப்பட்டு மூடிவிடப்பட்டன. இப்போது ஜனங்களுக்கு அறிக்கையிட்டு வியாதி கண்டால் உடனுக்குடன் தெரிவிக்க அதிகாரிகள் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஜனங்கள் மிகுந்த கலவரங் கொண்டிருக்கிறார்கள்.

சேலஞ்சில்லா திருப்பத்தூரிலும் மேற்கண்ட வியாதி பிரவேசித்துவிட்டதாகவும், கடைகளிலெல்லாம் கந்தகத்தண்ணீர் இறைக்கிறார்களென்றும், அழுக்கு வஸ்திரங்களைக் கொளுத்துகிறார்களென்றும் வதந்தி உலாவுகிறது. ஐயோ! இன்னும் இக்கொடுமை நீங்கினதில்லையே.

"எட்வர்ட்" நாணயம்:—நமது ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தியவர்களின் உருவந்தாங்கிய புது நாணயங்கள் கல்கத்தாவிலும், பம்பாயிலும் அச்சிடப்பட்டன. அவை யின்னும் சென்னைக்கு வரவில்லை. ஒருவேளை பெருந்தொகையான பணம் அச்சிடப்பட்டு ஜனங்களால் அபரிமிதமாக வழங்கப்படும் போதுதான்இங்கு வரும் போலும்.

பரீக்ஷைக்குப் போன மாணாக்கர்கள் தண்டனையடைந்தது:—மெட்ரிகுலேஷன் என்கிற பிரவேச பரீக்ஷைக் காஜரான K. ராமகிருஷ்ண பிள்ளை H. ராமசாமி ஐயங்கார், P. சங்கரமேனன் ஆகிய மூவரும் தங்கள் வயதைத் தப்பிதமாய்க் குறிப்பிட்டதற்காகவும்; V. ஜகநாதன், P. R. நாராயணப்பிள்ளை, P. அப்பண்ணு, S. சீனிவாசமூர்த்தி யிவர்கள் சட்ட விரோதமாய் நடந்துகொண்டதற்காகவும் தண்டிக்கப்பட்டார்கள். இவர்களில் கடைசியாய்ச் சொல்லப்பட்ட மாணவன் பரீக்ஷை ஹாலில் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு எழுதினதினால் கடினமாய்த் தண்டிக்கப்பட்டான். எப். ஏ. பரீக்ஷைக் காஜரான மகமட் அப்துல்ஹத் என்கிற மாணவன், கேள்விகட்கு உத்தரவு எழுதுகிறதற்குப்பதில் புத்தியீனமான வார்த்தைகளைக் கிருக்கிவைத்தற்காக சில வருஷகாலம் பரீக்ஷைக்கு ஆஜராகாதபடிக்கு நீக்கப்பட்டான். இனியாவது மாணாக்கர் எச்சரிப்படையவேண்டியது.

செந்தமிழ்:—இந்த பத்திரிகை மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளிவரும் ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை. இஃது பெரும்பான்மையும் தமிழிலக்கண இலக்கியங்களின் விஷயங்களையும், அரிய புராதனச் செந்தமிழ் நூல்களையும், சரித்திரங்களையும், ஒன்றையொன் றிகழாச் சமயக் கொள்கைகளையும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டியவைகளையும், வடமொழி ஆங்கில பாஷைகளிலிருந்து அவசியமாகக் கருதப்படும் நூன் மொழிபெயர்ப்புக்களையும், தென்மொழியின் அருமை பெருமைகளையும் நன்குணர்த்துகின்றது. இப்பத்திரிகையின்கண்தோன்றும் நூற்களைத் தனிப்புத்தகங்களாகச் செய்வதற்குரிய நிலையில் இது அச்சிடப்பட்டு வருகிறது.

இதன் பிரதி ஒன்று நமக்குக் கிடைக்கக் களிப்பெய்தினம். இது ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம்.

இந்தியா முன்னுக்கு வருவதெப்படி:—சென்ற ஜனவரிமீ 23உ வியாழக்கிழமை மாலே அலஹபாத்து மேயோ மண்டபத்தில் ஞான மார்க்கத்தைச்சேர்ந்த மிஸ்ட்ரஸ் ஆனிபெஸண்ட் "இந்தியா முன்னுக்கு வருவதெப்படி ?" என்கிற விஷயத்தைப்பற்றி உபந்நியசிக்கையில் இந்தியாவின் முக்கிய குறையாவது, அது கைத்தொழிலேயும் வர்த்தகத்தையும் அலக்ஷியம் பண்ணுவதுதானென்றும், கைத்தொழிலின் மேன்மையை இங்கிலண்டிடமிருந்து இந்தியா கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இந்தியர் தங்கள் கல்வியை கவர்ன்மெண்டில் ஊழியஞ்செய்து பிழைப்பதிலுபயோகம் செய்யாமல் தங்கள் தேசத்துப் பிரகிருதிப் பொருள்களே விர்த்திப்படுத்திப் பயனடைய உபயோகிக்கவேண்டுமென்றும், ஆனல் இங்கிலீஷ்கார ரிடமுள்ள ஒரு கெடுதி யென்னவெனில், அவர்கள் வர்த்தகத்தில் தன்னயம் விரும்புகிறார்களென்றும், அதனல் இந்தியாவில் பஞ்சங்க ளுண்டானதென்றும், அப் பஞ்சங்களில் சில கிறுஸ்தவ உபகாரிகள் சகாயஞ்செய்தது புகழத்தக்கதென்றும் கூறினர்கள்.

பைத்தியக்காரர் ஆஸ்பத்திரியில் தீவிபத்து:—லண்டன் பட்டணத்துக்கு வடபாகத்தில் 7-மைல் தூரத்தில் கட்டப்பட்டிருக்கிற கால்னி ஹாட்ச் என்கிற பைத்தியக்கார ஸ்திரீகள் ஆஸ்பத்திரியில் யூதஸ்திரீகள் வைக்கப்பட்டிருந்த பாகத்தில் ஜனவரிமீ 27உ அதிகாலே 4-30-மணிக்கு நெருப்புப் பிடித்துக்கொண்டது. அக் கட்டடம் மரத்தினலும் இரும்பினலும் கட்டப்பட்ட மூன்றடுக்கு மெத்தையாம். 600-பேர் அதற்குள்ளிருந்தார்கள். இவர்களெல்லாரும் நல்ல நித்திரையிலிருந்தார்கள். காற்றுவாட்டமாயிருந்ததால் தீ முழுதும் பரவிவிட்டது. உள்ளிருந்த வியாதிக்கார ஸ்திரீகள் நெருப்பைக்கண்டு பயமடைந்து தங்கள் இராத்திரி உடையுடன் அங்கலாய்த்து இங்குமங்கும் ஒடி மாண்டது பரிதாபத்துக் கிடமானது. ஒன்றும் செய்யாமலிருந்த அனேகர் உடல்கள் கரிக்கட்டைகள்போல் எரிந்து கிடந்தன, சிலஸ்திரீகள் ஒரு மூலேயில் ஒருவரையொருவர் பிணைத்துக்கொண்டு மரித்துக் கிடந்தார்கள். சிலர் மேலிருந்து பூமியில் விழுந்து மாண்டார்கள். மொத்தம் 53 ஸ்திரீகள் மடிந்தனர். இந்த விபந்து மிகவும் பரிதாபமானது.

மிஸ்டர் பிப்ஸ் நன்கொடை:—மிஸ்டர் பிப்ஸ் என்பவர் அமெரிக்க குபேரனகிய மிஸ்டர் ஆன்ட்றூ கார்னீஜியோடு சேர்ந்து வர்த்தகம்செய்யும் கூட்டாளி. மிஸ்டர் ஆன்ட்றூ கார்னீஜி ஐரோப்பா நாடெங்கும் தயாளப் பிரபுவென்று பேரெடுத்தாலும் இந்தியாவின் நன்மைக்கு ஒரு காசும் கொடுக்கவில்லே. ஆனல் அவர் கூட்டாளியாகிய மிஸ்டர் பிப்ஸ் இப்பொழுது இந்தியாவைச் சுற்றிப்பார்க்கவந்து இந்தியாவின் நன்மைக்கென்று 1-லக்ஷம் டாலர் அதாவது 20‘ஆயிரம் பவுன் நமது வைசிராயிடம் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார். இதை இந்தியாவின் பொருளாதார விஷயத்தில் செலவிடவேண்டுமென்பது அவருடைய கோரிக்கை, இத்தொகையினல் வருஷம் 700-பவுண்டு வட்டிகிடைக்கும். இந்த வட்டியைமாத்திரம் உபயோகஞ் செய்யப்படும். இதைக்கொண்டு லார்டு கர்ஸன் என்னசெய்யப்போகிறாரென்று இனித் தெரியும். மிஸ்டர் பிப்ஸ் இந்தியாமீது இவ்வளவு தயாளம் பாராட்டினது மதிக்கத்தக்கது. இவர் போவர் ஸ்திரீ பிள்ளேகளுக்கும் லக்ஷம் டாலர் நன்கொடை

செய்தார். விக்டோரியா ஞாபகச்சின்ன சம்பள உபகார நிதிக்குள் நன்கொடையாக (Donation) 200-பவுண்டு கொடுத்திருப்பதாகவும் வதந்தி.

சாகும்போது நடந்த விவாகம்:—லம்பர் அரசனுகிய வில்லியம் பிராட்லி ஜனவரிமீ 9ஂ இறந்துபோனார். இவருக்கு 80-லக்ஷம் பவுண்டு ஆஸ்தியுண்டு. நாலுநாளைக்குமுன்னே இறந்துபோவாரென்று வைத்தியரால் இவருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே தனக்கு அந்தரங்க காரியதரிசியாயிருந்த மேரி ஹானிமேயர்என்கிற பெண்ணை அழைத்துவரச்சொல்லி சாவுபடுக்கையிலிருந்தபடி அவளைக் கலியாணஞ் செய்துகொண்டார். அவருடைய ஆஸ்தி அவளுக்கும், தத்தெடுத்த இன்னொரு பையனுக்கும் உரியதாயிற்று.

உயர்தரக் கல்விசிபார்சுகள்:—தமிழ் தெலுங்கு கன்னடம்போன்ற சுதேச பாஷைகளை சர்வகலா சங்கத்தின் பரீக்ஷைகட்கும் பாடங்களாய் வைப்பதை நீக்கிவிடும் பக்ஷத்தில், கல்வியின் அபிவிருத்திக்கு கெடுதி சம்பவிக்கிறதாயிருக்கிறதென்று தஞ்சை வாசிகள் சிலர் சேர்ந்து கூட்டங்கூடி கல்வியிலாகா தலைவருக்குத் தெரிவித்திருக்கின்றனராம். ஏ, **சுகுணசுந்தரனே**! முன் தஞ்சைவாசி யொருவர் நின்பால் "அருமைத்தமிழுக் கரசாங்கத்தாரால் நேரிடும் ஆபத்தை" க்குறித்து முறையிட்டு நீயும் செல்லுமிடமெல்லாம் அதைப் பரவச்செய்தனை. இப்பொழுதும் நீ மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர்களாகிய மகா கனம்பொருந்திய கருணைக்கடலாம் ம-ா-ா-ஸ்ரீ, **பாஸ்கரசேதுபதி மகாராஜா** அவர்களையும் ம-ா-ா-ஸ்ரீ, 'பாண்டித்துரைத்தேவர் அவர்களையும் முன்னிட்டுச்சென்று சர்வகலாசங்கத்தார்களிடம் முறையிட்டுக் கல்வியபிவிர்த்தி யடையும்பொருட்டு சுதேச பாஷைகளை நீக்காவண்ணம் முயலுவாயாக.

குதிரைக்காரனோடுபோய்விட்டாள்:—லிஸ்பன் பட்டணத்தில் மிகப் பிரக்கியாதிபெற்ற ஒரு சீமானின் பத்தினி (Marchioness) தன் குதிரைக்காரனோடு எங்கேயோ ஓடிவிட்டாளாம். அவள் பிராயம் 23. மிகவும் சௌந்தர்யவதி. பெருத்த ஆஸ்திக்காரி. மனைவி யோடிவிட்டதைக்கேட்டவுடன் கணவன் தன் தலையைக் கல்லில்மோதி மூளையைச் சிதரச்செய்ய முயல்கையில் சிநேகரால் தடைசெய்யப்பட்டார்.

திருமைலாப்பூர் கோபுரதரிசனம்:—பிப்ரவரிமீ 2ஂ திங்கட்கிழமை சாயந்திரம் மைலாப்பூர் கோபுரதரிசனம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. பல்லாயிரம்ஜனங்கள் போயிருந்தார்கள். சுமார் 40-வருஷத்துக்கு முன்னால் இந்த கோபுரத்துக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. அதற்குப் பிறகு ஒருவரும் அதைப்பற்றிச் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. சுமார் 2-வருஷத்துக்கு முன்னாகச் சில கனவான்கள் சேர்ந்து பணம் திரட்டி இப்போது அந்தக் கோபுரவேலையை முடித்தார்கள். அந்தக் கோபுரம் வெகு அழகாயிருக்கின்றது. ஆகாசத்தை அளாவுகின்றது. அந்த க்ஷேத்திரமகிமைக்கும் அந்தக் கோபுர மகிமைக்கும் மிக்க ஒத்திருக்கிறது.

மோசஞ் செய்ததாகக்கேஸ்:—மெஸ்ர்ஸ் ஒயிட்டவே லேயட்லா கம்பெனியில் உத்ராப்பாயிருந்த கோவிந்து ராஜுலு முதலியார் என்பவர் கம்பெனி பணம் ரூபாய்-15-12-0 புஸ்தகத்தில் வரவுவைக்காமல் மோசஞ்செய்துவிட்டானென்று அக்கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் டார்க்கர் என்பவரால் நாளதுமீ 3ஂ எழும்பூர் போலீஸ் கோர்ட்டில் மாஜிஸ்திரேட் மிஸ்டர் W. E. T. கிளார்க் முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்டார். குற்றவாளி மரதியாய்ப் புஸ்தகத்தில் வரவுவைக்காமல் போனதே

யொழிய மோசக்கருத்தோடு செய்யவில்லையென்று ரூபிக்க, மாஜிஸ்திரேட் அவர் மீது குற்றமில்லையென்று விடுதலைசெய்தார்.

ஒரு பையனைக் கொலைசெய்தது:—சென்ற அக்டோபர் மாதத்தில், நெல்லூரில் பள்ளிக்கூடத்துக்குப்போன சுப்பிரமணியன் என்கிறபையன் காணாமல் போனான். பாட்டிக்காரி அவனைத்தேடி போலீஸிலறிவித்தாள். மறுநாள் பையனுடைய உடல் ஒரு கிணற்றில் கண்டெடுக்கப்பட்டது. சோதனைசெய்கையில் யாரோ அவன் நகைச்காசைப்பட்டு அவனைக்கொன்று கிணற்றில் போட்டதாக ஏற்பட்டது. இது சம்பந்தமாய் ஆதியப்பரெட்டி பொட்டிசேகாடு என்கிற இருவர் போலீஸாரால் பிடிக்கப்பட்டார்கள். இரண்டாவது குற்றவாளி நகையை ஒளித்துவைத்திருந்த இடத்தைப் போலீஸாருக்குக் காட்டினான். இருவரும் நெல்லூர் ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் T. M. சாமிநாதஐயர்அவர்கள்முன்னிலையில் கொலை, திருட்டுக் குற்றங்களில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டார். குற்றவாளிகள் பையனைக் கொலைசெய்ததை ஒருவரும் பாராதபடியால் அஸ்ஸெஸர்கள் அவர்கள் நிரபராதிகள் என்றார்கள். அதை ஜட்ஜ் ஒப்பவில்லை. கொலைசெய்ததற்கு நேரான சாட்சியில்லாவிட்டாலும் அவர்களே அதை நடத்தினார்களென்பதற்குப் போதுமான ஆதாரமுண்டென்று அவர் இருவரையும் ஜீவகாலபரியந்தம் தீவாந்தரசிறையிருக்க விதித்தார். இந்தக் கேஸ் சென்னைப் பெரியகோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது. குற்றவாளிக்காக மிஸ்டர் ஆலன்டாலிவாதித்தார். ஜஸ்டிஸ் மிஸ்டர் சுப்பிரமணிய ஐயர் அவர்களும் ஜஸ்டிஸ் டேவிட்ஸனும் இதை விசாரித்து, ஷை கீழ்க்கோர்ட்டு விசாரணையைத்தள்ளி, மறுபடியும் புனர்விசாரணைசெய்து குற்றவாளிகள் கொலைசெய்தார்களா இல்லையா என்று தீர்ப்புச்செய்ய உத்தரவளித்தார்கள்.

சட்டசபை ஸ்தானங்கள்:—சென்னை சட்டநிரூபண சபையில் டாக்டர் மில்லர் ஸ்தானத்துக்கு மிஸ்டர் J. B.. பில்ட்ரிபெக்கும், மிஸ்டர் C. சங்கரன் நாயகரும் அபேக்ஷகராய் நின்றதில், மிஸ்டர் பில்ட்ரி பெக்குத்தான் அதிக சம்மதம் கிடைத்து தெரிந்தெடுக்கப்பட்டவர். லெப்டினென்ட் கர்னல் சர் ஜார்ஜ் மூர் அவர்களும், தமது ஸ்தானத்துக்கு இராஜிநாமா கொடுத்துவிட்டபடியால், அந்தஸ்தானத்துக்கு மிஸ்டர் சங்கரன் நாயகரை நமது கவர்னர் நியமித்திருக்கிறார். இந்த இவருடைய நியமனங்களையும் கெஜட்டில் வெளியாக்கி யிருக்கிறது.

இந்தியாவின் வரிகள் தள்ளுபடி.

1903ஆ மார்ச்சுமீ 18உயாகிய புதன்கிழமை யன்று கல்கத்தாவில் கூடிய சுப்ரீம் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் நமது காருண்ணிய கவர்னர்ஜனரலாகிய **லார்டு கர்ஸன் பிரபு** அவர்கள் இந்தியாவின் வரவுசெலவு கணக்குப் படித்தபோது, உப்புவரியையும் இன்கம்டாக்ஸையும் குறைத்துவிட்டதாய்க் கூறினார். அதாவது, முன் ஒரு மணங்குள்ள உப்பை $2\frac{1}{2}$-ரூபாய்க்கு விற்றுவந்த நமது கவர்ன்மெண்டார் இப்போது 2-ரூபாய் வீதம் விற்று வருவார்கள் போலும். வருட வருமானம்-500-ரூபாய் உள்ளவர்களுக்கு வரிவிதித்து வந்தவர் இனி வருடாவருடம் 1000-ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் வரி விதிப்பர். பன்னாள் இக்கூடாவரிகளால் பீடிக்கப்பட்ட நம்மவர், இப்போது இக்கர்ஸன்பேருமானது அருள் வெள்ளமாகிய வசனமுதத்தையுண்டு களியாட்டயர்வாராக.

சரிகை தொப்பிகள்.

நெ. 50. வில்வெட் தொப்பியில் மேல் புரத்திலும் பக்கத்திலும் வெள்ளிசரிகையினல்பூபோட்டது. 1-க்கு ரூ. ...14-0-0.
ஷை ஜர்மனவெள்ளி 1-க்கு ரூ. 2-8-0.

நெ. 51. வில்வெட் தொப்பியில் ஒருபக்கத்தில்மாத்திரம் வெள்ளிசரிகையினல் இராணி முடி போட்டது 1-க்கு ரூ ... 3-0-0.
ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 1-4-0.

நெ. 52. வில்வெட் தொப்பியில் வெள்ளி சரிகையினல்மேல்புரத்திலும் ஒருபக்கத்தில் புஷ்பச் செடி போட்டது 1-க்கு ரூ. ... 4-8-0.
ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 1-8-0.

நெ. 53 வில்வெட் தொப்பியில் மேல்புரத்திலும் பக்கத்திலும் வெள்ளிசரிகையினல் அழகான பூ போட்டது 1-க்கு ரூ. ... 9-0-0.
ஷை ஜர்மன் வெள்ளி 1-க்கு ரூ. 2-0-0.

நெ. 54. வில்வெட் தொப்பியில் வெள்ளி சரிகையினல் மேல் புரத்தில் தாம்பிரகமலமும் பக்கத்தில் முழுமையும் கிளி, செடி முதலிய அழகான பூபோட்டது 1-க்கு. ரூ ...12-8-0.
ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 3-8-0.

நெ. 55. வில்வெட் தொப்பியில் வெள்ளி சரிகையினல் மேல் புரத்திலும் பக்கத்திலும் விசித்திரமான பூ வேலை செய்தது 1-க்கு ரூபாய் ...15-0-0.
ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 3-0-0.

நெ. 56. வில்வெட் தொப்பியில் வெள்ளிசரிகையினல் மேல்புரத்தில் தாம்பிரகமலமும், பக்கத்தில் மாங்காய்போல் பூ போட்டது 1-க்கு ரூ. ...10-0-0.
ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 3-0-0.

நெ. 57. வில்வெட் தொப்பியில் வெள்ளிசரிகையினல் மேல்புரத்திலும், பக்கத்திலும் போகர வேலை செய்தது அதிக நாணயமானது 1-க்கு ரூ. ...27-0-0.
ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 4-0-0.

சடைத் தலைப்பாகை. (டர்பன்)

நெ. 58. சில்க் என்னும் உயர்ந்த பட்டில் வெள்ளி சரிகைபோட்ட தலைப்பாகை 1-க்கு ரூ. ... 5-8-0.
ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 4-8-0.

நெ. 59. வெள்ளிசரிகை கோடுகள் போட்ட கொட்டடிதலைப்பாகை 1-க்கு ரூ. ... 6-8-0.
ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 5-8-0.

நெ. 60. வெள்ளி சரிகையினல் பூபோட்ட காசி தலைப்பாகை முழுமையும் பூபோட்டது 1-க்கு ரூபாய். ... 8-8-0.
ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 7-8-0.

நெ. 61. வெள்ளிசரிகையில்கோடுகள்போட்டதும் கோடுக்கு மத்தியில் பூபோட்ட காசி தலைப்பாகை அதிக நாணயமானது 1-க்கு ரூபாய் ...10-0-0.
ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 9-0-0.

மேற்செல்லிய தலைப்பாகைகளில் ஒவ்வொரு தினுசுகளும் மைசூர் தலைப்பாகை மாதிரி கட்டி அனுப்ப வேண்டுமானல் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 - அதிகமாகும். ஒவ்வொன்றுக்கும் வி. பி. சார்ஜ் போஸ்டேஜ், பாக்கிங்கு சார்ஜ். ரூ-2. அதிகமாகும். ஒரேதடைவையில் ஒரேதினுசில் மூன்றுவாங்கினல் போஸ்டேஜ் சார்ஜில் பாதிதள்ளிக் கொடுக்கப்படும்.

☞ மேற்படி தொப்பிகளும் தலைப்பாகைகளும் வேண்டுமானல் பாதிபணத்தை முந்தி மணியார்டர் அனுப்பவேண்டியது மற்றபணத்திற்கு வி. பி. மூலமாக அனுப்புவோம் இன்னும் அவரவர்களுக்கு வேண்டிய சாமான்களும் அனுப்புவோம். காட்லாக்வேண்டியவர்கள அரையணு ஸ்டாம்பு அனுப்பவேண்டியது. ஆர்டர் அனுப்புகிறவர்கள் தலையின் அளவு எடுத்து அனுப்பவேண்டியது. ஒரே தடவையில் ஒரே தினுசில் மூன்று தொப்பி வாங்கினல் போஸ்டேஜ் சார்ஜில்லாமல் அனுப்புவோம்.

கௌரி அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை போஸ்டு
சென்னை.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

NOTICE TO OUR SUBSCRIBERS.

As the *Suguna Sundaram* completes its first year with the April issue, it will enter upon the second year of its existence from the May issue. It is hoped, that all our Subscribers will not only continue their patronage but, will further encourage the wide circulation of the Journal. Subscribers are earnestly requested to remit their Subscriptions in advance, before the 30th June, at the favourable rates of Rs. 2-8-0. All subscriptions that remain unpaid after that date will be collected at the usual rate of Rs. 3-1-0 by V. P. Post.

நமது சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

நமது சுகுணசுந்தரப் பத்திரிகைக்கு நாளது வருஷம் ஏப்ரல்மாதத்துடன் முதல் வருஷம் முடிவுபெற்று மேமாதம் துவக்கி இரண்டாவது வருஷம் ஆரம்பமாகிறது. நமது சந்தாதாரர்கள் இந்த முதல் வருஷத்தில் ஆதரித்து வந்தபடியே அடுத்த வருஷமும் இதை ஆதரித்து வருவதோடுகூட இப்பத்திரிகை முன்னுக்கு வருமாறு தக்க முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களென்று நம்பப்படுகிறது. சந்தாதாரர்கள் தங்களுடைய அடுத்த வருஷத்திய சந்தாவை முன்னுடியே ஜூன்மாதம் 30-ம் தேதிக்குள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. முன்னுடி சந்தா செலுத்தாத ஏனையோர்கள் அந்தத் தேதிக்குப் பிறகு ரூ. 3—1—0. வீதம் வி. பி. தபால் மூலமாய் செலுத்தி நாம் அனுப்பும் பத்திரிகையைப் பெற்று ஆதரிக்க நேரிடுமென்பதை இதன் மூலமாய்த் தெரிவித்துக் கொள்ளலாயிற்று.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

மானேஜர்.

TO OUR CONTRIBUTORS.

The Editor will thankfully receive all suggestions towards the improvement of the journal.

Suguna Sundaram Office,
Turaiyur.

விஷயமெழுதும் நேயர்கட்கு.

இப்பத்திரிகை விருத்திக்கு வரும்பொருட்டு அப்போதைக்கப்போது தெரிவிக்கும் சமாசாரங்களை வந்தனங்களுடன் அங்கீகரிக்கப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

T. S. S.

ADVERTISEMENTS : Favourable Rates —Yearly Rs. 100 per page. For ½ a page Rs. 50. English advertisements at As. 6 per line. For other details apply to the Managing Proprietor, "Suguna Sundaram" Office, Turaiyur, Musiri Taluk.